பக்கங்கள்:பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 04 வெள்ளிக்கிழமை (17.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:142

# ஐ.நா. செயலரின் விசேட பிரதிநிதியாக விஜய் நம்பியார் இலங்கை விரைகிறார்

## முல்லைக்கரையில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்க



நியுயோர்க், ஏப்.17

இலங்கையில் - முல்லைத்தீவில் - மனித இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்கும் முயற்சியாக - ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் - கீ -மூன் - பிரபல மூத்த இந்திய ராஜதந்திரியும் செயலாளர் நாயகத்தின் பிரதம அதிகாரியுமான விஜய் நம்பியாரை தனது பிரதிநிதியாக அந்த நாட்டுக்கு அனுப்புகிறார்.

ஐ.நா. பொதுச் செயலாளரின் பிரதிநிதி இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு சென்றடைவார் என நம்பப்படுகிறது.

இலங்கை விவகாரத்தில் - முல்லைத் தீவின் மனிதப் பேரவலத்தைத் தடுக்கும் பணியில் - ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்-கீ -மூன் கரிசனை காட்டுவதாகவும், தமது பிரதிநிதி ஒருவரை அனுப்பி அங்குள்ள நிலைமையை நேரில் அறிந்து கொண்டு இலங்கை அர

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்தில் நாளை 'உரிமைக் குரல்' பேரணி

லண்டன், ஏப்.17

நெதர்லாந்தில் நாளை சனிக்கிழமை மாபெரும் 'உரிமைக் குரல்' பேரணி நிகழ்வு நடைபெறவுள்ளது.

டென்காக் பிரதான ரயில் நிலையத்தில் இருந்து பிற்பகல் 2 மணியளவில் தொடங்கும் பேரணி நாடாளுமன்றம் வரை செல்லவுள்ளது என நெதர்லாந்து தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

'தமிழினப் படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்',

'நிரந்தரமான போர்நிறுத்தம் உடனடியாக நடைமுறைப் [illegible]ப்படல் வேண்டும்',

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் ஐ.நா. செயலரின் பிரதிநிதி நம்பியார்

ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியாக விஜய் நம்பியார் இலங்கை வந்து சேர்ந்ததாக பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

அவர் கொழும்பு வந்த கையோடு நேற்று வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுக்களை நடத்தியதாக பிந்திய கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

விஜய் நம்பியாருடன் ஐ.நாவின் அரசியல் விவகாரப் பிரிவைச் சேர்ந்த ஹிற்றோக்கி டென்னும் வந்துள்ளார். அவர்கள் இருவரும் அனேகமாக இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்துவர் என நேற்றிரவு அறியவந்தது.

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சியில் படையினரைச் சந்தித்துப் பரிசில்கள் வழங்கினார்



கிளிநொச்சி, ஏப்.17

பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்பட்ட கிளிநொச்சிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று விஜயம் மேற்கொண்டார்.

சிங்கள - தமிழ் புத்தாண்டு நேரத்தில் படையினரைச் சந்திக்கவும் இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களைச் சந்திக்கவும் ஜனாதிபதி நேற்று வன்னிக்கு விஜயம் மேற் கொண்டார் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் விஜயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் விடுவிக்கப்பட்ட கிளிநொச்சிக்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டார்.

1950ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க விஜயம் மேற்கொண்ட பின் அரச தலைவர் ஒருவர் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டது இதுவே முதல் தடவை ஆகும்.

கிளிநொச்சி நகரின் மத்தியில் அமைந்துள்ள வைத்தியசாலை வளாகத்தில் நேற்றுக் காலை ஜானாதிபதியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர். கோத்தபாய ராஜபக்ஷ வரவேற்றார். அங்கு படைகளின் தளகர்த்தர் டொனால் பெரேரா, இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சரத் பொன்சேகா,

(16 ஆம் பக்கம் பார்க்க)

## குறுகிய நிலப்பகுதியில் அடைக்கலம் புகுந்துள்ள மக்களின் உயிருக்கு இந்தியா பாதுகாப்பளிக்க வேண்டும்

### கூட்டமைப்பினர் சிவ்சங்கர் மேனனிடம் வலியுறுத்து

புதுடில்லி, ஏப். 17

முல்லைத்தீவில் மிகக் குறுகிய நிலப் பகுதியில் அடைக்கலம் புகுந்துள்ள மக்களின் உயிருக்குப் பாதுகாப்பளிக்க இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு இந்தியாவிடம் கோரியுள்ளனர்.

இந்திய வெளியுறச் செயலர் சிவ்சங்கர் மேனனுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் இந்தக் கோரிக்கையை கூட்டமைப்பினர் விடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனனை நேற்று வியாழக்கிழமை சந்தித்து வன்னியில் உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக விளக்கியுள்ளனர்.

இந்தியப் பிரதமரின் இல்லத்தில் நேற்று பிற்பகல் 4 மணிக்கு தொடங்கிய சந்திப்பு சுமார் ஒரு மணி நேரத்துக்கு நீடித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் யுத்த நிறுத்தத்தை அறிவிக்குமாறு பிரிட்டனும் பிரான்ஸும் கூட்டாக வலியுறுத்து

### பொதுமக்களைப் புலிகள் கேடயமாக பாவிப்பதற்குக் கண்டனம்

கொழும்பு, ஏப். 17

வன்னியில் பாதுகாப்பு வலயத்தில் தங்கியுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதற்கும், அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவதற்கும் வசதியாக மீண்டும் புதிய யுத்தநிறுத்தம் ஒன்றை அமுல்படுத்துமாறு இலங்கை அரசிடம் பிரிட்டனும் பிரான்ஸும் கூட்டாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. பிரிட்டிஷ்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் முதற்கட்ட வாக்களிப்பின் போது ஜார்க்கட்டில் நக்ஸலைட்டுக்கள் நேற்றுத் தாக்குதல்

### படையினர் உட்பட 10 பேர் பலி

புதுடில்லி, ஏப். 17

இந்திய நாடாளுமன்றத்திற்கான நாடாளுமன்ற (லோக் சபா) தேர்தலில் 124 மக்களவைத் தொகுதிக்கான முதற் கட்ட வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது.

இவ்வாக்குப் பதிவின்போது நக்சலைட்டுக்களின் தாக்குதலுக்கு இலக்காகி பத்துப் பேர் உயிரிழந்தனர்.

எனினும், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வாக்களிப்பு நடைபெற்றது.

ஆந்திரா, கேரளா, மகாரஷ்டிரா உட்பட 17 மாநிலங்களிலுள்ள 124 மக்களவைத் தொகுதிகளிலேயே நேற்று வாக்குப் பதிவு நடைபெற்றது. (16 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கானையில் இன்று வைத்திய நிலையம் திறப்பு

சண்டிலிப்பாய், ஏப்.17

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங்கானை உப அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு ஆயுள்வேத மருத்துவ நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்தை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளர் புத்திரசிகாமணி திறந்து வைப்பார். (1-7-29)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி லீலாம்பிகை (பிள்ளை அக்கா) கணேசபிள்ளை



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாம்பிகை கணேசபிள்ளை 15.04.2009 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கணேசபிள்ளையின் (முன்னாள் உரிமையாளர், மகேந்திரா ஸ்ரோர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - மீனாட்சி தம்பதியினரின் மூத்த மகளும் ஞான சூரியன், ஞானாம்பாள் (பொற்கொடி - கனடா), கருணை நாயகி (பவளம் - கனடா), தங்கவடிவேல் (கொழும்பு), சண்முக வடிவேல் (கொழும்பு), யோகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோன்மணி, சாந்தலிங்கம் (கனடா), யோகலிங்கம் (கனடா), சரஸ்வதி (கொழும்பு), பன்னீர்செல்வி (கொழும்பு), மனோகரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் மதிவண்ணன் (லண்டன்), தர்சினி (கனடா), காலஞ்சென்ற ரவிவண்ணன் மற்றும் ஜெயவண்ணன் (கனடா), இதயவண்ணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வனஜா (லண்டன்), சிவஞானச்செல்வம் (கனடா), சுபாஜினி (கனடா), சுதர்சி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.04.2009 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.ஞானசூரியன் (சகோதரன்),
*95, சிவன்பண்ணை வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

**CANADA**
**T.p:: 0019056969025**

## பொன்னுத்துரை மகாதேவன்



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மகாதேவன் நேற்றுமுன்தினம் (15.04.2009) புதன் கிழமை மாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் நிற்சிங்கம் - மங்கையர்க்கரசி தம்பதியினரின் அன்புப் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் ரேவதி (லண்டன்), முகுந்தன் (ஆசிரியர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), முகிலன் (லண்டன்), பாரதி (ஆசிரியை, யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தருகரன் (லண்டன்), அருந்ததி (ஆசிரியை, யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), கஜேந்தினி (லண்டன்), மாலசுதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவஞானவதியார் (கொழும்பு), கைலாயவதியார் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி சுதா பற்குணதேவா (சிங்கப்பூர்), திருமதி விஜிதா கணேசராஜா (லண்டன்), திருமதி சசிதா மங்களேஸ்வரன் (கொழும்பு), சசிதரன் (மலேசியா) ஆகியோரின் தாய்மாமனும் தனுஜன், தாருண்ஜன், தாருஜா, பவனுஜா, மகிபன், சபிக்கா, சுருதிகா, சுருஜன், வர்ணன், பாமினி, அஸ்வின், சில்வியா, திவிசன், நிலக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 19.04.2009 மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கை ஆறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச் றோட், வட்டு வடக்கு,*
*சித்தன்கேணி.*

தகவல்:
ம.முகுந்தன் (மகன்).

## செல்லையா தில்லையம்பலம்
### (உரிமையாளர், விநாயகர் என்ஜினியறிங், கோண்டாவில்)



இணுவிலைப்பிறப்பிடமாகவும்இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தில்லையம்பலம் நேற்று (16.04.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மனோன்மணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் கெஜரெத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்) - இலட்சுமிப்பிள்ளை (நிலாவெளி) தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசநாயகியின் அன்புக் கணவரும் சுபத்ரா (சுவிஸ்), சுமதி (கனடா), சுபாஜினி, சுரேந்திரன் (போதனாசிரியர், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), சுரேந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இரட்ணராஜா (சுவிஸ்), குகதீசன் (கனடா) பிரேமகாந்தன் (பிருந்தாமில்), மேனகா, சிவநாதன் (போதனாசிரியர், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் லிங்காதேவி, லயன் சிவலிங்கம் (கிசோ ஒப்பந்தகாரர்), சகுந்தலாதேவி, காலஞ்சென்ற வாமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசநாயகம் (ஆங்கில ஆசிரியர், யாழ்.இந்து), தவராசா (பிரதம முகாமை உதவியாளர், வலி.தெற்கு பிரதேசசபை), சிவமலர், சோமேஸ்வரி, சித்திரவேலாயுதன் (ஓய்வுபெற்ற அதிபர், திருமலை), தர்மகுலராசா (பதிவாளர், நீதிமன்று அக்கரைப்பற்று), காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் வித்தகன், வித்தகி, வர்ணா, கிரிதரன், பிருந்தா, பிரவீணா, அருளினி, பிரகாசினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.04.2009) பி.ப. 4.30 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் வீதி,*
*இருபாலை.*

தகவல்:
குடும்பத்தினர்.

## இரசாயனவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.17

க.பொ.த.(உயர்தரம்) 2011 இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி ஆசிரியரும் வளவாளரும் தவறாது சமுகமளிக்கும்படி தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் கேட்டுக்கொள்கின்றது. (1)

## மாவட்ட கலாசாரப் பேரவையின் விசேட பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.17

மாவட்ட கலாசாரப் பேரவையின் விசேட பொதுக்கூட்டம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்டச் செயலர் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்துக்குப் பொதுச்சபை உறுப்பினர்களை தவறாது சமுகமளிக்குமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (50)

## உரும்பிராய் வைத்தியசாலையில் புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.17

உரும்பிராய் ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மருத்துவமனைத் திறப்பு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

டாக்டர் யாழினி யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ரிச்சாட் வோக்ஸ் கலந்து கொள்வார். (1-7)

## நலன்புரி நிலைய மக்களுக்கு ஆலயபரிபாலன சபை உதவி

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் நலன்புரி நிலைய மக்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு 20 ஆயிரம் ரூபாவினை வழங்கியுள்ளனர்.

ஆலய பெருந்திருவிழாவின் போது ஆலய அன்னதான சபைக்குக் கிடைத்த நிதியிலிருந்து இந்தத் தொகை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆலய பிரதம குரு சதாசிவ மகாலிங்கக் குருக்களால் நல்லை ஆதீன முதல்வரிடம் இந்த நிதி அண்மையில் கையளிக்கப்பட்டதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (50-207)

## வடமராட்சியில் இன்று மரம் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.17

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மரம் நாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத்தின் கூட்டுறவு நகரில் இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற காணிப்பதிவாளரும் கணுவில் கிளைக் குழுத் தலைவருமான சி.செல்வரத்தினம் கலந்துகொள்வார்.

மரம் நடுகை நிகழ்வு 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கட்டைவேலி கிளையிலும் 23ஆம் திகதி துன்னாலை வல்லியானந்தம் கிளையிலும் இடம்பெறும்.

கூட்டுறவு நகரில் எல்லா நாள்களிலும் கமுகு, தென்னை, மா, பலா, தோடை, எலுமிச்சை, மாதுளை, கொய்யா, வேம்பு, தேக்கு போன்ற மரங்கள் விற்பனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-7)

### தவறிவிட்டது

சரவணை மேற்கு, 2ஆம் வட்டாரம், வேலணை என்னும் முகவரியுடைய தம்பிராசா றோகினி என்பவரின் தே.அ.அட்டை (728544180V) 13.04.2009 திங்கட்கிழமை யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

### தவறிவிட்டது

பரலோகமாதா கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்னும் முகவரியுடைய தர்மலிங்கம் தவசீலன் என்பவரது தே.அ.அட்டை (750805078V) கடந்த 05.04.2009 அன்று திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறை, துறைமுகம் [illegible] கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## மணிவிழா வாழ்த்து



*யா/சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி அகவை அறுபதில் காலடி எடுத்து வைக்கும் எங்கள் அதிபர்*

### சங்கரப்பிள்ளை நவரட்ணவேல்
(SLTS - I வேல் master)

அவர்கள் எல்லா நலன்களும் பெற்று பல்லாண்டு காலம்சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை,
நீர்வேலி.

ஆசிரியர்கள்,
மாணவர்கள்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில்
*04 ★ 06 ★ 1926*



விண்ணில்
*16 ★ 03 ★ 2009*

கடந்த 16.03.2009 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி நாகலிங்கம் விசாலாட்சி

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.04.2009)வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசனநிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

எமது குடும்பத்தலைவியான எங்கள் அன்னை அவர்கள் நோயுற்று இருந்த போது அவருக்கு சிகிச்சையும் ஆறுதலும் அளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், மற்றும் பல வழிகளிலும் உதவிகள் செய்தோர் அனைவருக்கும் அத்துடன் அன்னாரைப் பராமரிக்க உதவிய செலிங்கோ ஹோம், நேர்சிங்சேவை நிறுவனப்பணியாளர்கட்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிறப்புற நடைபெறுவதற்கு பல வழிகளிலும் உதவிய யாழ். மாவட்ட அரச அதிபர் திரு கே.கணேஸ் ஐயா அவர்கட்கும் யாழ். மாவட்ட திட்டமிடல் செயலக உத்தியோகத்தர்கட்கும் மாவட்ட தரவு மைய உத்தியோகத்தர்கட்கும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் மற்றும் அமரரின் இறுதிக்கிரியைகளில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் துண்டுப்பிரசுரம் அச்சிட்டு வழங்கியவர்களுக்கும் கருத்துரை வழங்கியவர்களுக்கும் இறுதியாத்திரையில் பங்கு கொண்டிருந்தோருக்கும் எல்லா வழிகளிலும் உறுதுணையாகச் செயற்பட்ட அயலவர்களுக்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகள்.

5/2, முதலியார் லேன்,
நாவலர் றோட், நல்லூர்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னப்பு வேன்முருகோன்பிள்ளை (நயினாதீவு)
### (ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் - நல்லூர்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு வேன்முருகோன்பிள்ளை நேற்று சிவபத மெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓங்காரலெட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான (கிளாக்கர்) சின்னப்பு - சின்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி சொர்ணம் மாவின் அன்பு மருமகனும் பாமினி (ஆசிரியை, யா/செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை), மோகன்ராஜ்(கனடா), காலஞ்சென்ற உதயராஜ், மற்றும் தர்மினிஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தலிங்கம் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்- நெடுந்தீவு) அவர்களின் அருமை மாமனாரும் நேசலெட்சுமி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற விமலாம்பிகை மற்றும் தையல்நாயகி, நடேசபிள்ளை (அவுஸ்திரேலியா), பதுமாதேவி (கனடா), சோமேஸ்வரபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், தனலட்சுமி மற்றும் தங்கலெட்சுமி, பரமேஸ்வரி, நவரத்தினசிங்கம், துரைராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான வீரகத்தி, கனகரத்தினம், நடராஜா, பரராஜசிங்கம் மற்றும் புவனேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் அக்ஷயா,கிசோத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*76/1, ஒட்டுமடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சாந்தலிங்கம் (மருமகன்),
சோமேஸ்வரப்பிள்ளை (சகோதரர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# முல்லைத்தீவுச் சிறுவர்களின் கதி?

எந்தக் கொம்பன் சொன்னாலும், முல்லைத் தீவில் தான் நடத்தும் போரை நிறுத்தப்போவதில்லை; இறுதி முடிவு கிடைக்கும் வரை அது தொடரும் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு, சர்வதேசத்துக்குக் கூறிவருகிறது. தனது அந்த முடிவில் எவரது அழுத்தத்திலும் பெயரிலும் மாற்றம் இருக்காது என்று ஜனாதிபதி முதற்கொண்டு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் வரை வெகு உறுதியாக நிற்கின்றனர்.

இந்தப் போரினால் தமிழ் மக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்படுகிறார்கள். அவர்களில் பல்லாயிரம் பேர்களின் வாழ்க்கை சுக்குநூறாகியும் சிதைந்தும் போகிறது. உடல் நலம் பாதிப்பு, ஊனமுறுதல், மனநலம் குன்றுதல் என்று எண்ணிப் பார்த்துக் கணக்குப் போட்டுக் காட்ட முடியாத அளவுக்கு இன்றைய பாதிப்புக்களை விட அவற்றின் பக்க விளைவுகள் எதிர்காலத் தாக்கங்கள் பலவாறானவை என்பது சொல்லித் தெரியவேண்டியதல்ல. இப்போது, உடனடியாகத் தெரிவதை விட, இன்னும் பல ஆண்டுகளுக்கு - ஆகக் குறைந்தது இரண்டு மூன்று சந்ததிகளை - பாதித்து சமூக முடமாக்குதலில் முடியும்.

அவற்றில் ஒன்று இப்போது உத்தியோக பூர்வமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களின் நான்கில் பகுதியினர் - 25 சத வீதத்தினர் - போசாக் குறைபாட்டுக்கு ஆளாகி உள்ளனர்.

அண்மையில் போரினால் இடம்பெயர்ந்த குடும்பங்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் போர்ப் பிரதேசமாக விளங்கும் - விளங்கிய - முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து வயதுக்குக் குறைந்த சிறுவர்களின் 25 சதவீதமானோர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சுகாதார அமைச்சினால் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், இலங்கையில் திருகோணமலை மாவட்டமே சிறுவர் போசாக்கின்மையில் முதல் இடத்தைப் பிடித்திருந்தது. அந்த மாவட்டமும், குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசமும் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் - 2006 ஆம் ஆண்டில் - போரினால் பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

மாவிலாறுத் தண்ணீர் விவகாரத்தைக் காலாக்கொண்டு அங்கு நடைபெற்ற போரினால், தூர் தமிழ் மக்கள் குடிபெயர்க்கப்பட்டனர். திருகோணமலையில் இப்போதும் அகதிகளாக - ஏதிலிகளாக - தங்கள் வளம் நிறைந்த - மண் வளமும் கடல் வளமும் கால்நடை வளமும் நிறைந்த பூமியைவிட்டு வந்து - திரும்பிச் செல்ல முடியாது தவிப்பது ஈழத் தமிழ் மக்களின் இருண்ட அத்தியாயங்களில் ஒன்று.

அங்கு நடைபெற்ற போரினால் சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டார்கள். இப்போது அதனை தோற்கடித்து முல்லைத்தீவு 'முன்னுக்கு' வந்திருக்கிறது. உலக நடப்பியலில், போர் நடைபெறும் பிரதேசங்களில் முதலில் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களும் முதியவர்களுமே. அந்தப் போர்த் தீங்குகளின் பாதிப்பு அவர்களையே முதலில் சுற்றிவளைத்து வழமையான வாழ்வியலை வளைத்து நொறுக்கி விடுவதுண்டு.

முல்லைத்தீவில் சிறுவர் போசாக்கின்மை 25 சதவீதமாக உயர்ந்து நிற்பது நாட்டிலேயே அதிகூடியது என்று சுகாதார அமைச்சின் புள்ளி விவரங்கள் எடுத்துச் சொல்கின்றன. ஆனால், அப்பகுதிகளில் உள்ள மருத்துவர் ஒருவர் சிறுவர் போசாக்கின்மை 69 சதவீதம் என்று கூறியுள்ளமையும் குறிப்பிடப்படவேண்டியது. அதனைச் சுகாதார அமைச்சு மறுத்திருக்கிறது.

எப்படியோ, நாட்டிலேயே முல்லைத்தீவு மாவட்டத்தில் தான் சிறுவர்கள் போசாக்கின்மையால் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உள்ளாந்தரமாகப் பல சங்கதிகளைக் கொண்டது. எப்படியோ எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினரின் வாழ்க்கை 'முடமாக்க'ப்பட்டுவிட்டது என்பது மட்டும் யதார்த்தம். அவர்களின் வாழ்வுக் காலம் முழுவதும் இருள் சூழ்ந்து போகும் அபாயமும் உடனிருக்கும்.

பாதிப்புற்ற அந்தச் சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கையைச் சீராக்க, ஓரளவிலேனும் நேராக்க பன்முகக் கூட்டு முயற்சிகளும், மனித நேயத்துடனான, மனிதாபிமானம் நிறைந்த மனவோட்டங்களும் தேவை.

# சுதந்திரமான கண்காணிப்புக் குழுவாகச் செயற்பட தென்னாசியாவின் அதியுயர் கல்விமான்கள் விருப்பம்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம்

இலங்கையின் போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு சுதந்திரமான பார்வையாளர்கள் குழுவாகச் செயற்படத் தயார் என்று தெற்காசிய நாடுகளின் முன்னாள் நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், சமயத் தலைவர்கள் ஆகியோர் இலங்கை அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

தென்னாசியாவின் கல்விமான்கள் பலர் கையெழுத்திட்டு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாண்புமிகு இலங்கை அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு

ஸ்ரீலங்காவில் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தீவிரம் அடைந்துள்ள மோதல் காரணமாக வன்னிப் பகுதியில் உருவாகிவரும் மனிதப் பேரழிவு ஆபத்துக் குறித்து தொடர்ந்து எங்களின் ஆழ்ந்த கவலைகளை வெளிப்படுத்தி வருகின்ற, தெற்காசியாவின் அக்கறை கொண்ட குடிமக்களின் மிக்பெரிய கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்கள் ஏப்ரல் 13, 14 ஆகிய இரு நாள்களுக்கு உங்களால் அறிவிக்கப்பட்ட மனித நேயப் போர் இடைநிறுத்தத்திற்கு முதலில் எங்களது பாராட்டையும் ஆதரவையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மோதல் நிறுத்தப்படுவதை வரவேற்பதாக ஏற்கனவே கூறியிருந்த விடுதலைப் புலிகள் இயக்கம் தற்போது நீங்கள் அறிவித்துள்ள போர் இடைநிறுத்த அறிவிப்பையும் ஏற்றுக் கடைப்பிடிக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

மனித நேயப் போர் இடைநிறுத்தம் என்று உங்களால் அழைக்கப்படுகின்ற இந்தப் போர் இடைநிறுத்தத்தை மோதலில் சிக்கியுள்ள அப்பாவித் தமிழ் மக்கள் இடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் உண்மையில் அவர்கள் மீது கொண்ட அக்கறைதான் இந்தப் போர் இடைநிறுத்தத்துக்கு காரணம் என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்களால் அறிவிக்கப்பட்டுள்ள இந்தப் போர் இடைநிறுத்தத்துக்கு தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பைச் (சார்க்) சேர்ந்த அனைத்து உறுப்பினர்களிடமும் ஆதரவு கோருவதற்காக இதன் நகலை தெற்காசிய நாடுகளின் அரசுத் தலைவர்கள் அனைவருக்கும் அனுப்பி இருக்கின்றோம்.

உங்களால் அறிவிக்கப்பட்டுள்ள மனிதநேய போர் இடைநிறுத்தம் தேவையான அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்பதற்காக இதன் நகலை தெற்காசிய ஊடகங்களுக்கும் அனுப்பியிருக்கின்றோம்.

இந்த விடயத்தின் முக்கியத்துவத்தை ஏற்கும் வகையில் நீங்கள் உடனடியாக ஆக்கபூர்வமான முறையில் பதில் அளிப்பீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம். அப்போதுதான் போர் இடைநிறுத்தத்தை கண்காணிப்பதற்கு எங்கள் உறுப்பினர்களின் பெயர்களை அறிவிப்பதற்கும் அந்தப் பொறுப்பை ஏற் பதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கு எங்களால் இயலும். இந்த வாய்ப்பு தவறிப்போவதற்கு நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள் என்று நாங்கள் உறுதியுடன் நம்புகின்றோம் - என்றுள்ளது.

# தமிழகத்தை நோக்கி நகர்கிறது சூறாவளி வடக்கில் பலத்த காற்றுடன் கூடிய மழை

## வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

இலங்கையை நோக்கி வீச இருந்த சூறாவளி இந்தியாவின் தமிழகத்தை நோக்கி நகர ஆரம்பித்துள்ளதாக வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் யாழ். குடாநாட்டுக்கு கிழக்கே சுமார் 1200 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் தமிழக கரையோரங்களை நோக்கியே நகர்கிறது என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதனால் அடுத்த 48 மணி நேரத்தின் பின்னர் வடக்கில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யுமே தவிர சூறாவளி தாக்கம் ஏற்படமாட்டாது என கூறப்படுகிறது.

தற்போது இலங்கையில் சகல பகுதிகளிலும் இரவு நேரங்களிலும் வெப்ப நிலை அதிகரித்து காணப்படுகிறது. இக்காலங்களில் இலங்கையில் சூரியன் உச்சத்தில் இருப்பதால் வெப்ப நிலை அதிகரித்திருப்பதுடன் பூமியின் உஷ்ண நிலையும் அதிகரிக்கிறது.

இரவு நேரங்களில் காற்று வீசினாலும் உஷ்ணமடைந்த காற்றாகவே வீசுகிறது. ச[illegible]பிலிருந்து தரைப் பகுதியை [illegible] காற்று வீசினாலும் கடற்பகுதியும் உஷ்ண நிலையிலேயே காணப்படுகிறது. இந்த நிலை இன்னும் ஓரிரு தினங்களுக்கு தொடரலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# புற்று நோயாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.17

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேச செயலக புற்றுநோயாளர்களுக்கான அன்பளிப்புக்களை வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விருந்தினராக கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.பிறேமினி, புற்றுநோய் வைத்திய நிபுணர் ந.ஜெயக்குமார், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் ஆகியோர் கலந்துகொள்வர். (204-72)

# தென்மராட்சி நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 762 குடும்பங்கள் தங்க வைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

தென்மராட்சி பிரதேச நலன்புரி நிலையங்களில் கடந்த 16 ஆம் திகதி வரையான கணக்கெடுப்பின்படி ஆயிரத்து 762 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 197 பேர் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதடி ஆயுர்வேத மாணவர் விடுதி நலன்புரி நிலையத்தில் 411 குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்து 74 பேரும், கைதடி சைவச் சிறுவர் இல்ல நலன்புரி நிலையத்தில் 231 குடும்பங்களைச் சேர்ந்த 675 பேரும், கொடிகாமம் அரசினர் வித்தியாலய நலன்புரி நிலையத்தில் 304 குடும்பங்களைச் சேர்ந்த 996 பேரும் மிருசுவில் திருக்குடும்ப கன்னியர்மட நலன்புரி நிலையத்தில் 570 குடுமபங்களைச் சேர்ந்த ஆயிரத்து 745 பேரும் நாவற்குழி பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலைய நலன்புரி நிலையத்தில் 246 குடும்பங்களைச் சேர்ந்த707 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கைதடி ஆயுர்வேத மாணவர் விடுதி நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 102 குடும்பங்களைச் சேர்ந்த 271 பேரும் சிறுவர் இல்ல நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 154 குடும்பங்களைச்சேர்ந்த 433 பேரும் மழை வெள்ளம் காரணமாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழி பனை ஆராய்ச்சி நிலையத்தில் 150 கொட்டில்கள் அமைக்கும் பணிகள் தற்போது துரித கதியில் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டது. (50- 207)

# தென்மராட்சி நலன்புரி நிலையங்களுக்கு விரைவில் தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம், ஏப்.17

இடம்பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டிருக்கும் தென்மராட்சியில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு விரைவில் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த தொலைபேசி வசதியை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை தென்மராட்சிப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது. இந்தத் தொலைபேசி இணைப்பினை பெறுவதற்கு ரெலிக்கொம் நிறுவனத்திடம் விண்ணப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களின் அத்தியாவசிய தேவை கருதி இந்த வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - நலன்புரி முகாம்களில் தபால் சேவையும் சீராக இடம்பெற்று வருகின்றது. (50- 224)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 5 | 18.04.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | காலை 07.15வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் |
| | காலை 6.43 வரை |
| சுபநேரம்: | 03.03 - 04.33 |
| ராகுகாலம்: | 09.03 - 10.33 |

# இவ்வாண்டு அதிகளவான இலங்கையர்கள் சுவிஸில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்

இந்த வருடத்தில் அதிகளவான இலங்கையர்கள் சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாக அந்நாட்டு குடிவரவுத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்த நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாவது நிலையில் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எரித்திரியாவிலிருந்து 782 விண்ணப்பங்களும் இலங்கையிலிருந்து 454 விண்ணப்பங்களும் நைஜீரியாவிலிருந்து 431 விண்ணப்பங்களும் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அகதி அந்தஸ்து குறித்த சட்ட விதிகள் கடுமையாக்கப்பட வேண்டுமென சுவிட்சர்லாந்து நீதியமைச்சரினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைத் திட்டம் தொடர்பில் தற்போது விவாதம் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் அகதி அந்தஸ்து கோரியோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுவிட்சர்லாந்தின் மத்திய குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது இந்த வருடத்தில் குறைந்தளவானோரே அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சோமாலியா மற்றும் எரித்திரியாவைச் சேர்ந்தவர்களினால் சமர்ப்பிக்கப்படும் அகதி அந்தஸ்திற்கான விண்ணப்பங்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை இடம் மாற்ற ஆசிய நாடுகள் கடும் எதிர்ப்பு

லாகூர், ஏப்.17

2011ஆம் ஆண்டு நடக்கும் உலகக் கோப்பை போட்டியை வேறு நாட்டுக்கு மாற்றக்கூடாது என்று இந்தியா உட்பட 4 நாடுகள் தெரிவித்துள்ளன.

அடுத்த உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி 2011ஆம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடத்தப்படுகிறது. மும்பையில் நடந்த தீவிரவாதிகள் தாக்குதல், பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஆகியவற்றால் இந்தப் போட்டிக்கு தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே உலகக் கோப்பைப் போட்டியை வேறுநாடுகளுக்கு மாற்றவேண்டும் என்று சில நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இதுபற்றி சர்வதேச கிரிக்கெட் சபை ஆலோசித்து வருகிறது. இதுபற்றி முடிவு எடுப்பதற்காக சர்வதேச கிரிக்கெட் சபை விரைவில் கூடுகிறது. உலகக் கோப்பை போட்டியை அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் நடத்தலாம் என்ற திட்டம் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் உள்ளது.

இதற்கு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய 4 நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. வேறு இடத்துக்கு மாற்றுவதாக இருந்தால் சர்வதேச கிரிக்கெட் சபையின் உறுப்பினர்களாக உள்ள நாடுகளின் சம்மதம் பெறவேண்டும். மொத்தம் உள்ள 10 நாடுகளில் 7 நாடுகள் சம்மதம் தெரிவித்தால்தான் அதை மாற்றமுடியும். ஆனால் 10 நாடுகளில் 4 நாடுகள் ஆசிய நாடுகள் என்பதால் மாற்றத்துக்கு போதிய ஆதரவு கிடைக்க வாய்ப்பு இல்லை.

## பத்மஶ்ரீ விருது வழங்கும் விழாவில் டோனி, ஹர்பஜன் பங்கேற்கவில்லை

டில்லியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த பத்மஶ்ரீ விருதுகள் வழங்கும் விழாவில் இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி, ஹர்பஜன்சிங் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் இரண்டு பேரும் பத்மஶ்ரீ விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி பிரதீபா பட்டீல் விருது வழங்கிய சமயத்தில், அவர்கள் இருவரும் விளம்பர படப்பிடிப்பில் இருந்தனர் என்றும், குறிப்பாக ஹர்பஜன்சிங் அப்போது டில்லியில் தான் இருந்தார் என்றும் பத்திரிகைகளில் வெளியான தகவலால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இதனை ஹர்பஜன்சிங் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

'இந்தக் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது. விருது வழங்கும் சமயத்தில் நான் டில்லியில் இருந்ததாக யாராவது நிரூபித்தால் கிரிக்கெட்டை விட்டே விலகத் தயார். ஜலந்தரில் உள்ள எனது வீட்டில் சில பிரச்சினைகள் இருந்ததால் என்னால் விருது வழங்கும் விழாவுக்கு வர இயலாது என்று சம்பந்தப்பட்டவர்களிடம் முன்கூட்டியே தகவல் தெரிவித்து இருந்தேன் - என்றார்.

## ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா நாளை கோலாகல ஆரம்பம்

இந்தியக் கிரிக்கெட் சபையின் துணை அமைப்பான இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) நடத்தும் ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டிகள் நாளை சனிக்கிழமை தென்னாபிரிக்காவில் கோலாகலமாகத் தொடங்குகின்றன.

இரண்டாவது தடவையாக நடக்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா இம்முறை கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துவிட்டன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

நாளை 18ஆம் திகதி தொடங்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழாவின், தொடக்க ஆட்டத்தில் டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, மும்பை இந்தியன்ஸ் அணியைச் சந்திக்கிறது. இதை யொட்டி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. பயிற்சியின் ஒரு பகுதியாக சென்னை சூப்பர் கிங்ஸ், உள்ளூர் அணியான நஷூவா டால்பின்ஸ் அணியுடன் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 180 ஓட்டங்களைக் குவித்தது. தொடக்க வீரர் ஹைடன் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், சுரேஷ் ரெய்னா, பார்த்தீவ் பட்டேல் ஆகியோர் அரைச் சதம் விளாசி அணியைக் காப்பாற்றினார்கள். ரெய்னா தனது அரைச் சதத்தில் 8 பவுண்டரியும், 2 சிக்ஸரும் விளாசியிருந்தார். தொடர்ந்து ஆடிய டால்பின்ஸ் அணி 41ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

## கிரிக்கெட் பற்றி அறிய ஷில்பா ஷெட்டி ஆர்வம்!

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் பங்குதாரர்களில் ஒருவரான நடிகை ஷில்பா ஷெட்டி, ருவென்ரி 20 கிரிக்கெட்டைப் பற்றி நிறைய விடயங்களை அறிய ஆர்வமாக இருக்கிறார். அவர் கேப்டவுனில் அளித்த பேட்டியில், ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டிகள் எனக்கு முற்றிலும் புதிய அனுபவம்.

இதில் முக்கியமான அடிப்படை விவரங்கள், புள்ளி விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தலைவர் ஷேன் வோர்ன் மீது நான் உயர்ந்த மதிப்பு வைத்திருக்கிறேன். அவரிடம் இருந்து நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்வேன் என்று நம்புகிறேன் என்றார்.

## ராஜஸ்தான் அணியிலிருந்து முகமட் கைப் அதிரடி நீக்கம்!

கேப்டவுன், ஏப்.17

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் கடந்த ஆண்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி கோப்பையை வென்றாலும், அந்த அணியில் இடம்பெற்றிருந்த இந்திய வீரர் 28 வயதான முகமது கைப்பின் பங்களிப்பு குறிப்பிடும்படி இல்லை. முதலாவது ஐ.பி.எல் போட்டியின் 16 ஆட்டத்திலும் விளையாடிய கைப் வெறும் 176 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.

தற்போது நடந்து வரும் பயிற்சியிலும் அவரது துடுப்பாட்டம் எடுபடவில்லை. இதனால் அதிருப்தியடைந்த அந்த அணியின் தலைவரும், பயிற்சியாளருமான ஷேன் வோர்ன், கைப்பை அதிரடியாக நீக்கியிருக்கிறார்.

அணியின் 18 பேர் கொண்ட இறுதிப் பட்டியலில் அவரது பெயர் இடம்பெறவில்லை. மேலும் தினேஷ் சலுங்கே, பராஸ் டோக்ரா, அனுப் ரேவன்ட்கர், ஶ்ரீதீப் மங்கேலா, அஷ்ரப் மக்டா, அசார் மாலிக் ஆகியோரும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுகிறார்கள். 18 வீரர்கள் கொண்ட பட்டியலில் யாராவது வீரர் காயமடைந்தால் மட்டுமே, கைப் மீண்டும் அணிக்குத் திரும்ப வாய்ப்பு இருப்பதாக ராஜஸ்தான் அணியின் உரிமையாளர் மனோஜ் பதாலே தெரிவித்தார். கடந்த ஆண்டு ராஜஸ்தான் அணியில் அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்டவர் கைப் ஆவார். அவர் இலங்கை மதிப்பில் ஆறரைக் கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்க வீரரின் பந்துவீச்சு குறித்து கிரிக்கெட் கவுன்ஸிலிடம் மீண்டும் முறைப்பாடு

டுபாய், ஏப்.17

தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் போத்தாவின் பந்து வீச்சுக் குறித்து ஐ.சி.சியிடம் மீண்டும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக போர்ட் எலிசபெத்தில் நடந்த 4ஆவது ஒரு நாள் போட்டியில் ஆடிய தென்னாபிரிக்க சுழற்பந்து வீச்சாளர் ஜோகன் போத்தாவின் பந்து வீச்சுக் குறித்து ஆட்ட நடுவர்கள் பிரையன் ஜெர்லிங், அசோக் டி சில்வா மற்றும் 3ஆவது நடுவர் ருடி கர்ட்ஸன் ஆகியோர் சந்தேகம் எழுப்பியுள்ளனர். அவர் விதிகளுக்கு புறம்பாக முறையற்ற வகையில் பந்து வீசுகிறார் என நடுவர்கள், போட்டி நடுவர் ரஞ்சன் மடுகல்லேயிடம் புகார் செய்தனர். அவர் இது பற்றி சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுக்கும் (ஐ.சி.சி.), தென்னாபிரிக்க அணி நிர்வாகத்துக்கும் தகவல் அனுப்பியுள்ளார்.

போத்தா வேகமாக வீசும் பந்துகளும், 'தூஸ்ரா' முறையில் வீசும் பந்துகளும் அவரது பந்து வீச்சு முறை குறித்த சந்தேகத்தை எழுப்பியுள்ளன.

ஐ.சி.சியிடம் இருந்து இது குறித்து அதிகாரப்பூர்வமாக நோட்டீஸ் வந்த பின்னர் 21 நாள்களுக்குள் போத்தாவின் பந்து வீச்சு முறை குறித்து பயோ-மெக்கானிக்கல் பந்துவீச்சு சோதனை நடத்தப்படும். அதுவரை அவர் தொடர்ந்து சர்வதேச போட்டியில் விளையாடலாம்.

பந்து வீச்சு சர்ச்சையில் போத்தா சிக்குவது இது 2ஆவது முறையாகும். ஏற்கனவே 2006ஆம் ஆண்டும் இதே போன்ற புகாருக்குள்ளான போத்தா, பரிசோதனைகளுக்குப் பிறகு பந்து வீசத் தடை விதிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் தனது பந்து வீச்சை சரிசெய்து கொண்டதற்கான பரிசோதனையை முடித்த பின்னர் 2007ஆம் ஆண்டு மீண்டும் பந்து வீச அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## துடுப்பாட்டத்திலும் ஜொலிப்பேன்

### - ஹர்பஜன் சிங் -

மும்பை இந்தியன்ஸ் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங், ஐ.பி.எல். கிரிக்கெட்டின்போது தனது துடுப்பு மட்டை பேசும் என்கிறார். அவர் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்;

ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டியில் ஒவ்வொரு துடுப்பாட்டக்காரர்களும் அதிரடியாக விளையாடுவார்கள். இதில் நானும் எந்த வகையிலும் சளைத்தவன் அல்லன். எனது அதிரடியான துடுப்பாட்டத்தையும் நீங்கள் பார்க்கலாம். எனக்கு எந்த ஒரு தனிப்பட்ட வீரரும் இலக்கு கிடையாது. வெற்றிபெற வேண்டும் என்றால், ஒட்டு மொத்த அணியையும் இலக்காக கொண்டு செயல்பட்டால் மட்டுமே முடியும்.

எனவே எந்த குறிப்பிட்ட துடுப்பாட்டக்காரர்களையும் இலக்காக வைத்துக் கொள்வதில்லை - என்றார். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பல தலைவர்கள் முறை பற்றி ஹர்பஜன் சிங் குறிப்பிடுகையில், உண்மையை சொல்ல வேண்டும் என்றால் நான் அந்த அணி வீரர் கிடையாது.

அவர்கள் 4 பேரை தலைவராக வைத்து ஆடினாலும், 11 பேரை தலைவராக வைத்து ஆடினாலும் அது பற்றி எனக்குக் கவலையில்லை. இந்தப் புதிய திட்டத்தை அவர்கள் எப்படிச் செயற்படுத்துவார்கள் என்பது எனக்குத் தெரியாது. இருப்பினும் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

## இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயற்சியாளராக அன்டி பிளவர்!

லண்டன், ஏப்.17

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக அன்டி பிளவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த பீற்றர் மூர்ஸுக்கும், அணித் தலைவராக இருந்த பீற்றர்ஸனுக்கும் இடையே கடந்த ஜனவரி மாதம் மைக்கல் வோகனை அணியில் சேர்ப்பது தொடர்பாக மோதல் ஏற்பட்டது. இரண்டு பேரும் வெளிப்படையாக ஒருவருக்கொருவர் வசைபாடினர். இதனால் இரண்டு பேரும் தங்களது பதவியை இழந்தனர்.

இதைத் தொடர்ந்து புதிய அணித்தலைவராக ஸ்டிரோஸ் நியமிக்கப்பட்டார். ஆனால் பயிற்சியாளர் உடனடியாக நியமிக்கப்படவில்லை. 11 வார கால மேற்கிந்தியத் தீவுகளுக்கான சுற்றுப்பயணத்துக்கு உதவிப் பயிற்சியாளராக அன்டி பிளவர் தற்காலிகமாகச் செயற்பட்டார்.

இந்த நிலையில் இங்கிலாந்து அணியின் புதிய பயிற்சியாளராக அன்டி பிளவர் நியமிக்கப்படுகிறார் என நேற்றுமுன்தினம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. சிம்பாப்வே அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளரான அன்டி பிளவருக்கு 40 வயது ஆகிறது. இது தனக்கு அளிக்கப்பட்ட மிகப்பெரிய கௌரவம் என்று அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

## ஐ.பி.எல். போட்டிக்கான ஆதரவு பாகிஸ்தானில் இம்முறை குறைவு

2ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் ஆடவில்லை. மும்பைத் தாக்குதல் சம்பவத்திற்கு பின்னர், பாகிஸ்தான் வீரர்கள் இந்தியா செல்ல அந்த நாட்டு கிரிக்கெட் சபை தடை விதித்தது. இருப்பினும் ஐ.பி.எல். தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டதால் கடைசி நேரத்தில் பாகிஸ்தான் வீரர்களுக்கு, அதன் கிரிக்கெட் சபை அனுமதி அளித்தது.

ஆனால் அணி வீரர்களின் பட்டியல் ஏற்கனவே தயாராகிவிட்டதால் பாகிஸ்தான் வீரர்களை விளையாட அனுமதிக்க முடியாது என்று ஐ.பி.எல். நிர்வாகம் தெரிவித்துவிட்டது. இந்த நிலையில் பாகிஸ்தான் வீரர்கள் இல்லாததால் அந்த நாட்டில் போட்டியை டி.வியில் பார்க்கும் ரசிகர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும் என்று பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் ரமிஸ் ராஜா கூறியுள்ளார். ஐ.பி.எல். இந்தியாவில் இருந்து வெளிநாட்டிற்கு மாற்றப்பட்டது, அதில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடாதது இவை எல்லாம் எங்கள் [illegible] ஐ.பி.எல். கிரிக்கெட் [illegible] குறைத்துள்ளன - என்றார் அவர்.




தென்னாபிரிக்காவில் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நாளை ஆரம்பமாகிறது. [illegible] பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட ஐ.பி.எல். [illegible] லலித் மோடி, கொல்கத்தா அணி உரிமையாளர் ஷாருக்கான் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.மேற்கு பிரதேச செயலக தேசிய இலக்கியப் போட்டி முடிவுகள்

சங்கானை,ஏப்.17

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்கான தேசிய இலக்கியப் போட்டியில் வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் வருமாறு:-

**கட்டுரை-கனிஷ்ட பிரிவு (வரையறை)**

முதலாமிடம் - தே.காயத்திரி (விக்ரோறியாக் கல்லூரி), இரண்டாமிடம் - கா.செந்தூரன் (வட்டு. மத்திய கல்லூரி), மூன்றாமிடம்- சி.கோபிகா (வட்டு. மத்திய கல்லூரி)

**கட்டுரை-சிரேஷ்ட பிரிவு(வரையறை)**

முதலாமிடம்- மோ.மைதிலி (வட்டு. இந்துக் கல்லூரி), இரண்டாமிடம்- உ.கார்த்திகா (வெல்வில் அறநெறிப் பாடசாலை, சங்கானை), மூன்றாமிடம்- மு.சங்கீதா (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

**கவிதை-கனிஷ்ட பிரிவு (வரையறை)**

முதலாமிடம்- சி.சாஜினி (சித்தங்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம்), இரண்டாமிடம்- கா.செந்தூரன் (வட்டு. மத்திய கல்லூரி), மூன்றாமிடம்- சி.செவ்வந்தி (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

**கவிதை-சிரேஷ்ட பிரிவு (வரையறை)**

முதலாமிடம்- ந.சுபாஸ்கரன் (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), இரண்டாமிடம்-சி.துளசிகா(சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), மூன்றாமிடம்- ஜீ.மாதுரி (விக்ரோறியாக் கல்லூரி).

**சிறுகதை-கனிஷ்ட பிரிவு (வரையறை)**

முதலாமிடம்-தி.பிரிந்தா (யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை, சுழிபுரம்) இரண்டாமிடம்-தெ.தர்சிகா (விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), மூன்றாமிடம்-ம.மாதவி(யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலை, சுழிபுரம்).

**சிறுகதை-சிரேஷ்ட பிரிவு (வரையறை)**

முதலாமிடம்- ச.அபிலாஷா (வட்டு. மத்திய கல்லூரி), இரண்டாமிடம்- சு.சுஜித்தா (வட்டு.மத்திய கல்லூரி), மூன்றாமிடம்- க.மிருணாளினி(விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)

**கவிதை- (திறந்த)**

முதலாமிடம்- பு.ஜெயமலர்(மல்லாகம் வீதி, சங்கானை), இரண்டாமிடம்- நா.கஜேந்திரன் (தேவாலய வீதி, சங்கானை), மூன்றாமிடம்- ச.நிகேஸ் (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை)

**சிறுகதை- (திறந்த)**

முதலாமிடம்- க.நல்லதம்பி (துணைவி, வட்டுக்கோட்டை), இரண்டாமிடம்- யோ.ஜினித்தா (தேவாலய வீதி, சங்கானை), மூன்றாமிடம்- ச.திவாகரன் (அராலி மத்தி, வட்டுக்கோட்டை)

**பாடல் எழுதும் போட்டி(திறந்த)**

முதலாமிடம்-பு.ஜெயமலர் (மல்லாகம் வீதி, சங்கானை), இரண்டாமிடம்- க.நல்லதம்பி (துணைவி ,வட்டுக்கோட்டை), மூன்றாமிடம்- நா.கஜேந்திரன்(தேவாலய வீதி, சங்கானை) (50-29)

## நலன்புரிச் சங்கத்தின் மாதாந்தக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாதாந்தக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மனுவல் வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா 'நீரிழிவு நோயும் அதனைத் தடுத்தலும்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆசியுரை வழங்கவுள்ளார். (204)

## வை.எம்.சி.ஏ. பொதுக்கூட்டம்

ஆனைக்கோட்டை, ஏப். 17

வடபிராந்திய வை.எம்.சி.ஏக்களின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு உடுவில் வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெறுமெனவும், அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அதன் பொதுச் செயலாளர் இ.அருள்றொகான் அறிவித்துள்ளார். (50-20)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# ஜி.சீ.ஈ.சாதாரணதரப்பரீட்சை; மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள்

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் ''உதயனுக்கு''அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த முடிவுகள் வருமாறு:

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

**ஆங்கில மொழி மூலம்**

குகராஜன் ராதிகேசன் - 8ஏசி, துளசி மகேந்திரன் - 7ஏ2பி, மித்திரரஞ்சன் அஞ்சுதன் ஜோகான் - 7ஏபிசி, வத்சனி சிவராஜதேவா - 5ஏ4பி, சில்வியா றொபேட் தவநாயகம் - 5ஏபிசி2எஸ், துவாரகா செந்தில்நாதன் - 5ஏ2சி2எஸ், லோகேஸ்வரன் சீறிவிஜிதரன் - 4ஏ3சி2எஸ், ஜசித்தா யோகராஜா - 4ஏபிசி2எஸ், சகானவி துரைராஜா - 3ஏ3பி2சிஎஸ், சோதிராஜா திலக்சன் - 3ஏ2பி2சி2எஸ்.

**தமிழ் மொழி மூலம்**

சரிதா செல்லத்துரை - 6ஏ2பிசி, பரமநாயகம் மயுரதன் - 6ஏபிசி, மனோஜினி சந்திரசோதி - 5ஏ4பி, கஸ்தூரி சிவகுமார் - 5ஏ2பிசிஎஸ், சத்திதாசன் ஜசீபன் - 5ஏ2பிசிள்ஸ், சரனியா புண்ணியமூர்த்தி - 5ஏ2பிசிஎஸ், றெனுஜா ராசலிங்கம் - 5ஏபி3சி, மேரி டக்சாயினி அன்ரன் யுலியஸ் - 4ஏ3பிசிஎஸ், கவுசிக்கா சிறிதா மோதரராஜா - 4ஏ2பி3சி, பாலச்சந்திரன் சயந்தன் - 4ஏ2பி2சிஎஸ், யசோதா செல்வராசா - 4ஏ2பி2சிஎஸ், கஜஇந்திரமுருகன் தவரஞ்சன் - 4ஏபி3சி, மஞ்சுளா கமலநாயகம் - 4ஏ3சி2எஸ், சகானா சிவஞானரட்ணம் - 3ஏ4பி2சி,

செல்வராஜா சிந்துஜன் - 3ஏ3பி2சிஎஸ், யசோதா புண்ணியமூர்த்தி - 3ஏ3பி2எஸ், சிங்கராஜரட்ணம் கிறிசாந் - 3ஏ2பி2 சி2எஸ், சிவஞானசுந்தரம் ராஜகோகிலன் - 3ஏ2பி2சி2எஸ், பாக்கிய நாதன் ஸ்ரீகுகன் - 3ஏ2பி3சி, குருபரன் சோதிநாதன் பிரஸோபனன் - 3ஏபி4சிஎஸ், மருதலிங்கம் விஜிராஜ் - 3ஏபி4சி, ரவிந்திரன் கிறிஸ்னமேனன் - 3ஏபி3சி2எஸ்.

**வட்டு மத்திய கல்லூரி**

ம.மயூரா - 9ஏ, கா.சர்மிலா - 7ஏ2பி, க.லனிக்கா - 7ஏபிஎஸ், தே.சதீஸன் - 5ஏபி2சிஎஸ், க.காயத்திரி - 4ஏ2பி2சி.

**வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி**

**ஆங்கில மொழி மூலம்**

அ.மேனகா - 8ஏபி, க.யாழினி - 8ஏபி, சு.அனுஷா - 7ஏபிசி, செ.கோகிலா - 6ஏ2பிசி, ப.கல்யாணி - 5ஏபி2சி.

**தமிழ் மொழி மூலம்**

ர.அல்விணா - 8ஏஎஸ், ச.தர்மிலா - 7ஏபிசி, ச.சங்கரி - 7ஏபிஎஸ், பொ.ஜெயகௌரி - 7ஏபிஎஸ், யோ.கார்த்திகா - 6ஏ2பிஎஸ், ஜெ.சிவரூபி - 6ஏபிசிஎஸ், க.நிதர்சனா - 6ஏசிஎஸ், வே.சோபிகா - 4ஏ4பிசி, ம.ஜனனி - 5ஏ3சி, சி.நிரோஜா - 5ஏ2சி2எஸ், ஆ.மயூரி - 4ஏ2பிசிஎஸ், நா.துவாரகா - 4ஏபி2சி2எஸ், சி.லாவண்யா - 4ஏபிசி3எஸ். (50-9-236)

## முன்பள்ளி விளையாட்டு விழா

அச்சுவேலி, ஏப்.17

புத்தூர் மேற்கு கலைமதி பாலர் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலைமதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பால முன்பள்ளியின் தலைவர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் விளையாட்டு விழாவில் யாழ்.கல்வி வலய கல்விப்பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பொறுப்பாளர் எம்.தர்மராசா கலந்து கொள்ளவுள்ளார். (50-11)

# சுதேச வைத்திய மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை அச்சுவேலியில் அடுத்த மாதம் திறந்து வைப்பு

அச்சுவேலி,ஏப்.17

அச்சுவேலியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதேச வைத்திய மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை மே மாத நடுப்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. 90 லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் கூடியதாக இந்தத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி சமுர்த்தி வங்கிக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள சுதேச வைத்திய மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை யாழ்.பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையின் கீழ் செயற்படவுள்ளது.

அச்சுவேலியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுதேச வைத்திய மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கான மூலிகைகள் சங்கானையில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைத் தோட்டத்தில் இருந்தும் தனியாரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

சுதேச வைத்திய மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் கட்டுமாணப் பணிகள் நிறைவ[illegible] நிலையில் இருப்பதாகவும் மே மாதம் [illegible]ண்டாம் வாரத்தில் தொழிற்சாலையைத் திறந்து தொழிற்பட வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (04-11)

# மரங்களை நடுகை செய்து வளத்தைப் பேண ஒவ்வொரு பணியாளரும் முன்வர வேண்டும்

## யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.17

எமது பிரதேசத்தின் வளத்தைப் பெருக்கிட ஒவ்வொரு பணியாளரும் மரக்கன்றுகளை நட்டு, சூழலைச் செழிப்புறச் செய்வதே இன்றைய காலத்தின் தேவையாகும்.



இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சமாசத் தலைவரும், யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான ப.கிரிதரன். புத்தாண்டு தினத்தன்று பயன்தரும் மரக்கன்றுகளை நடும் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்:-

தற்போதைய நிலையில் எமது பிரதேசத்தில் போரினாலும் மற்றும் அண்மையில் இடம் பெற்ற 'நிஷா' புயல் அனர்த்தத்தினா லும் பல்லாயிரக்கணக்கான மரங்கள் அழிக் கப்பட்டுள்ளன.

இந்த மரங்கள் அழிக்கப்பட்டதால் எமது பிரதேசம் முழுவதும் பாலைவனமாக மாறும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இதைத் தடுப்பதற்கு இழந்த மரவளத்தை ஈடுசெய்வதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து மரங்களை நட்டு, எமது பிரதேசத்தின் சுற்றுச்சூழல் வளத்தைப் பெருக்கிட வேண்டும்.

முன்னைய காலங்களில் எமது பிரதேசம் முழுதும் மரங்களால் சூழப்பட்டு சோலைவனமாகவே காட்சியளித்தது.

அப்படியான மரச்சோலைகள் தற்போது படிப்படியாக அழிக்கப்பட்டு விட்டன.

இவற்றை ஈடுசெய்ய மர நடுகைத் திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதுடன் நடப்படும் மரங்களை உரிய முறையில் பாதுகாத்துப் பயன்பெறுவதற்கு ஒவ்வொரு பணியாளரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் - என்று தெரிவித்தார். (04-124)

## லயன்ஸ் கழகத்தின் ஆங்கிலக் கற்கை நெறிகள்

மண்டுவில், ஏப்.17

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் அடிப்படை ஆங்கிலம், டிப்ளோமா ஆங்கிலம் ஆகிய இரண்டு கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் இல. 23, டச்சு வீதியில் உள்ள [illegible] நாதனிடம் [illegible] மாறும் கேட்கப்பட்டுள்ளது. (50-9-59)

## சமய சந்நிதிகளில்

சங்கானை,ஏப்.17

பொன்னாலை சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

இளவாலை புனித யூதாததேயு ஆலய வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நவநாள் வழிபாடுகள் ஒவ்வொரு நாளும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். (204)



தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய ஆயுள்வேத வைத்தியசாலைத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வைத்தியசாலையைத் திறந்து வைப்பதையும், துர்க்கையம்மன் தேவஸ்தானப் பரிபாலன சபைத் தலைவர் ஆறு.திருமுருகன் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மிகச் சிறந்த வங்கியாக 11ஆவது தடவையாகவும் கொமர்ஷல் வங்கி

முன்னைய ஆண்டுகளின் மிகச் சிறந்த வங்கிகள் பலவும் கடன் நெருக்கடி மற்றும் நிதிச் சந்தைகளில் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக தமது ஸ்தாபனங்களைப் போட்டியாளர்களிடம் இழந்த ஓர் ஆண்டில் இலங்கை கொமர்ஷல் வங்கி, உலகின் மிக மதிப்பு வாய்ந்த நிதி வெளியீடுகளில் ஒன்றான அமெரிக்க குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் 11ஆவது ஆண்டாக இலங்கையில் மிகச் சிறந்த வங்கி என தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குளோபல் பினான்ஸ் மிகச் சிறந்த வளர்முகச் சந்தை வங்கிகள் பற்றிய தனது ஆண்டு ஆய்வினை வெளியிட்டுள்ள 16ஆவது ஆண்டு இதுவாகும். இந்த அறிக்கை ஆசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, லத்தீன், அமெரிக்கா, மத்தி மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள மிகச் சிறந்த வங்கிகளை உள்ளடக்கியுள்ளது.

கடைசியாகக் கிடைத்துள்ள இக் கௌரவம் பற்றி கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அமித குணரத்ன விளக்குகையில் "தற்போது நிலவும் பாதகமான சூழலில் நிதியியல் நிறுவனங்கள் பொதுஜன நம்பிக்கையை கட்டியெழுப்புவதும், நீடித்து வைத்திருப்பதும் சிரமமான விடயமாகும். நெருக்கடி தவிர்ப்பு முகாமைத்துவ முறைமைகள், சிறப்பான சேவை மற்றும் உன்னத நிருவாகம் போன்ற எமது வல்லமைகளை மீண்டும் அங்கீகரித்திருப்பது குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். தொடர்ந்து 11 ஆவது ஆண்டாக மிகச்சிறந்த வங்கியாகத் தர நிர்யணம் செய்யப்பட்டமை இந்த பிராந்தியத்தில் தனித்துவமான நிலையான சிறப்புச் செயற்பாட்டுத் தரத்தினை கொமர்ஷல் வங்கி நிலைநாட்டியிருப்பதை உணர்த்துகிறது'' என்று குறிப்பிட்டார்.

இவ்வாண்டு வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதில் குளோபல் பினான்ஸ் இலக்கு மற்றும் புறநிலை காரணிகளை கவனத்தில் எடுத்துக் கொண்டது. இலக்கு உசிதங்களில், ஆதனங்களில் வளர்ச்சி, இலாபத்தன்மை, சேவையின் பூகோள விசாலிப்பு கேந்திரமான உறவுகள், போட்டித்தன்மையான கட்டணமுறை மற்றும் சேவைத்தாக்கம் ஆகியவை உள்ளடங்கின. புறச்சார்ப்பு உசிதங்களில் நியாயத் தன்மை மற்றும் கடன்விகித ஆய்வாளர்கள் வங்கியியல் ஆலோசகர்கள் மற்றும் இத்துறையிலுள்ள ஏனையோர் அத்துடன் நிறுவக நிதி நிருவாகிகளின் அபிப்பிராயங்கள் உள்ளடக்கப்பட்டன. 2009 இல் வழங்கப்பட்ட இவ்விருதுகள், 2008 இல் சம்பந்தப்பட்ட வங்கிகளின் செயற்பாட்டின் அடிப்படையில் அமைந்ததாகும்.

குளோபல் பினான்ஸிடமிருந்து மிகச் சிறந்த வங்கி- 2009 விருதினைப் பெற்ற இப் பிராந்தியத்திலுள்ள ஏனைய பிரபல வங்கிகளில் HSBC, HDFC வங்கி- இந்திய, ஹபிப் வங்கி- பாகிஸ்தான், ஷின்ஹான் வங்கி- தென் கொரியா, சைனாட்ரஸ்ட் கொமர்ஷல் வங்கி- தாய்வான், மற்றும் ஜனதா வங்கி- பங்களாதேஷ் ஆகியவை உள்ளடங்கும். ஆசியாவிலுள்ள 20 நாடுகளின் மிகச்சிறந்த வங்கிகள் ஆய்வில் இனங்காணப்பட்டன.

2008இல் மிகச் சிறந்த வங்கிகளாக தரப் படுத்தப்பட்ட பிராந்தியத்திலுள்ள சில வங்கிகள் போட்டியாளர்களிடம் தமது ஸ்தானங்களை இழந்தன. இவற்றில் பப்ளிக் பாங்க் பெர்ஹாட்டிடம் தோல்வியுற்று மலேசியா மேபாங்க் மத்திய ஆசிய PT வங்கியிடம் தோல்வியுற்ற இந்தோனேஷிய மனமொன் வங்கி, கஷ்கொமர்ட்ஸ் வங்கியிடம் தோல்வியுற்ற கஸகஸ்தான் BTA மற்றும் ஆசிய கொமர்ஷல் வங்கியிடம் தோல்வியுற்ற வியட்நாம் சக்கோம்பாங் ஆகியன உள்ளடங்கும்.

2009 இல் 22ஆவது ஆண்டாக பிரசுரமாகும் குளோபல் பினான்ஸ் 50,000 சந்தாதாரர்களையும் 158இற்கு மேற்பட்ட நாடுகளில் 180,000இற்கு அதிகமான வாசகர்களையும் கொண்டுள்ளது.

பிரதம நிறைவேற்று அதிகாரிகள் பிரதம நிதி அதிகாரிகள், பொருளாளர்கள் மற்றும் நிதி அதிகாரிகள் உள்ளடங்குவர். தொழில்சார் முகாமைத்துவத்தின் கீழ் சகல ஆதனங்களிலும் 80 சதவீதத்துக்கு மேல் கட்டுப்பாடு வைத்துள்ள 8000 பிரதான முதலீட்டாளர்களையும் இலக்கு வைத்து குளோபல் பினான்ஸ் சேவை புரிகிறது.

1969 இல் நிறுவப்பட்ட கொமர்ஷல் வங்கியின் வலையமைப்பானது இலங்கையில் 170 கணனி இணைப்பிலான கிளைகள் மற்றும் சுப்பர் மார்க்கெட் வங்கியியல் கருமபீடங்கள் மற்றும் 336 ATM உள்ளடக்கியுள்ளது. 2008 இல் இவ்வங்கி உலகின் 1000 உச்சநிலை வங்கிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டதுடன் ஸ்திரத் தன்மையில் உலகில் 155 ஆவது நிலை, படி ஒன்று மூலதனத்தில் 950 ஆவது இடத்தில் 'த பாங்கர்' என்ற புகழ் பெற்ற உலக வங்கியியல் சஞ்சிகையினால் தரப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் 'ஆண்டின் தலைசிறந்த வங்கி என ஏழு தடவைகள் 'த பாங்கர்' சஞ்சிகை சிறப்பு வழங்கியுள்ளது. 2007 ஜுலையில் இவ்வங்கி மிகச் சிறந்த வங்கியென மற்றொரு புகழ்வாய்ந்த சர்வதேச நிதி சஞ்சிகையான 'யூ ரோமணி' யினால் தரச்சிறப்பு வழங் கப்பட்டது.

கொமர்ஷல் வங்கி 2008 இறுதி…ல் உறுதியான நிலைப்பாட்டு டன் நி… மற்றும் வரிக்கு முந்திய இலாபமாக … பில் லியன் ஈட்டியது. இது … ஆண்டினைவிட 12.16 … வளர்ச்சியாகும். நிதி 'வற்' மற் றும் பிந்திய இலாபமாக ரூ 4.268 பி… பெற்றது.

விளம்பர விவரணம்

# தொழில் வாய்ப்பினைப் பெறுவதற்கு CIMA சிறந்த உலக நுழைவுச்சீட்டு

CIMA வின் தெற்காசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் பிராந்திய நிர்வாகி பிறட்லி எமஸன் அபேசா வழங்கிய செவ்வி

CIMA வர்த்தக கணக்காளர் தொகுதியானது சர்வதேச அங்கீகாரம் பெற்ற தேர்ச்சியுடைய முகாமைத்துவக் கணக்கியல் பட்டத்தினை வழங்கும் ஒரு தொகுதியாகும். ஐக்கிய இராச்சியத்தின் றோயல் சாட்டர் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட இத்தொகுதியானது தற்போது நடைமுறையில் காணப்படும் ஒத்த தொகுதிகளும் முகாமைத்துவத்தினை அதன் மையப் பொருளாகக் கொண்டு செயற்படும் ஒரே அமைப்பாகத் திகழ்வதுடன், இவ்வாண்டு "PQ" சஞ்சிகையின் வருடாந்த சிறந்த காணக்காளரைத் தேர்ந்தெடுக்கும் விருதினில் சிறந்த கணக்காளர் தொகுதி எனும் விருதினையும் வென்றுள்ளது. ஐக்கிய இராச்சிய வெளியே உலகளவில் CIMA அதிகளவில் வெற்றிகரமாகச் செயற்படும் இரண்டாவது நாடு இலங்கையாகவும் சர்வதேச ரீதியில் மிகவும் சிறந்த முறையில் செயற்படும் கிளையாகவும் திகழ்கின்றது.

**ஏனைய கணக்கியல் தகைமையிலிருந்து எவ்வாறு CIMA வேறுபடுகின்றது?**

CIMA அதிகளவு வர்த்தக முகாமைத்துவத்தின் தேர்ச்சியினை மையமாகக் கொண்டுள்ள ஒரு கல்வித் தகைமையாகும். எம்முடன் இணைந்துள்ள மாணவர்கள் சிறந்த நிறுவனங்களில் உயர்ந்த பதவிகளை எய்தலுக்குக் கைகொடுத்து உதவுவதே எமது முக்கிய குறிக்கோளாகத் திகழ்கின்றது. இதற்கொப்ப ஏனைய கணக்கியல் தமைமைகளுடன் ஒப்பீடு செய்கையில் CIMA தனது செயற்பாட்டுத் திட்டம் மற்றும் இழப்பு வாய்ப்பு முகாமைத்துவம் ஆகிய பகுதிகளில் ஊன்றிய கவனத்தினைச் செலுத்துவதினை நீங்கள் இனங்காண முடியும். மேலும் முகாமைத்துவத்தினை எமது மையப்பொருளாகக் கொள்வதினால் நாம் கடந்த காலத்தில் அல்லாது நிகழ்காலத்திலும் மற்றும் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டும் செயற்படுகின்றோம்.

எமது அங்கத்தவர்கள் அனைத்துத் துறைகளிலும் பரந்து காணப்படுகின்றனர். சுற்றுலா, வர்த்தகம், நிதியியல், உற்பத்தி மற்றும் ஆடை உற்பத்தி போன்ற துறைகளில் உயர் பதவிகளையும் வகிக்கின்றனர். இது CIMA கல்வித் தகைமை ஊடாக இவர்கள் பெற்றுள்ள தேர்ச்சிக்குச் சான்றாக அமைகின்றது.

எமது கல்வித் தகைமையானது ஓர் இறுதி மட்டத் தகைமை மட்டுமல்ல, மாறாக இது ஐந்து வருடத்திற்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்பட்டு அக்காலத்தின் நடைமுறைக்கேற்ப திருத்தியமைக்கப்படுகின்றது. இதற்கொப்ப தற்போது ஐக்கிய இராச்சியத்தில் பாத் பல்கலைக்கழகத்தினால் சர்வதேச ரீதியில் ஏறக்குறைய 4,900 நிறுவனங்களை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இதில் பங்கேற்ற நிறுவனங்களை 2015இல் CIMA தகைமை எவ்வாறு மாற்றியமைக்கப்படவேண்டும் என வினவினோம். அவர்களின் பதில்களின் மீளாய்வு மூலம் எதிர்காலத்தின் தேவையினைப் பூர்த்திசெய்யும் வண்ணம் எமது கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாம் இவர்கள் சமூகத்தில் ஊக்குவிப்பாளர்களாகத் திகழ்வதையே விரும்புகிறோம். CIMA அங்கத்தவர்கள் நடைமுறையில் நிருவாகத் தீர்மானங்களில் பெரும் பங்கினை வகிக்கின்றனர். நாம் 'T' கணக்காளர்களைப் போல தரவு ஆராய்வு மற்றும் செயற்றிட்ட நோக்கம் ' என்பவற்றிலிருந்து விலகி அதற்கும் மேலாக, 'இப் படியிலிருந்து வரும் வருடம் எமது நிறுவனத்தினை மேலும் உயர் படிப்புக்கு எவ்வாறு எடுத்துச் செல்வோம்' என்பதைப் பற்றியே சிந்திக்கின்றோம். இதே எமது சிறப்பாகும்.

மேலும் இத்தேவைக்கேற்ப எமது தொழில்நுட்ப அறிவினையும் நாம் வளர்க்கின்றோம். இலங்கையில் உதாரணமாக தொழில்நுட்பக் கருதத்தரங்குகள் இடைவிடாது நடத்தப்படுவதுடன், இரு மாதங்களுக்கு ஒருமுறை இவ்வாறாக ஏற்படும் தொழில்நுட்பக் கணக்கியல் தொடர்பான மாற்றங்கள் மற்றும் முன்னெடுப் புகள் பற்றி நமது அங்கத்தவர்கள் மற்றும் நிறுவனத் தொகுதிகளுக்கு நாம் தகவல்களை பரிமாறும் செயற்பாட்டினையும் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

**CIMA ஒரு ஐக்கிய இராச்சியத்தின் கல்வித் தகைமை எனும் வகையில் சர்வதேச ரீதியில் இது எவ்வாறு அங்கீகாரம் பெற்றுள்ளது?**

கடந்த வருடம் எமது வளர்ச்சி உலகளாவிய ரீதியில் 8% ஆகக் காணப்பட்டது. தற்போதைய தரவுகளின்படி 165 நாடுகளில் எமது மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 171,000ஆகக் காணப்படுகின்றது. இரு மாதங்களுக்கு முன்னர் CPA அவுஸ்திரேலியா மற்றும் CIMA கனடா ஆகிய பிரிவுகள் CIMA தகைமையை அங்கீகரித்துள்ளன. எனவே எமது கல்வித் தகைமையைப் பெறும் ஒருவர் ஏனைய இரு தகைமைகளின் அங்கத்தவர் ஆகும் அரிய வாய்ப்பினை நாம் ஏற்படத்தி யுள்ளோம். இது சர்வதேச ரீதியில் CIMA பெறும் மற்றும் பெற்றுக்கொண்டிருக்கும் தொடர்ச்சியான வளர்ச்சியடையும் அங்கீகா ரத்தினையே எடுத்தியம்புகின்றது. மேலும் ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்ல விரும்புவோருக்கு CIMA தகைமையானது மேல் பட்ட பட்டதாரி தகைமைக்கு ஏற்புடையதாகக் கருதப்படுகின்றது. நாம் எப்போதும் இக்கல்வித் தகைமை சிறந்த உலக நுழைவுச்சீட்டு என்று மட்டுமே கூறியுள்ளோம். ஆனால் தற்போது இது பல நாடுகளின் வீஸாவினைக் கொண்டுள்ள சிறந்த கடவுச்சீட்டாகவே அமைந்துள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**இலங்கையில் CIMA வின் வளர்ச்சி எவ்வாறு காணப்படுகின்றது?**

CIMA இலங்கையில் கடந்த 40 வருடங்களாக வெற்றிப் பாதையில் தொடர்ச்சியான முன்னேற்றத்தினை எடுத்தியம்பியுள்ள ஒரு கல்வித் தகைமையாகும். தற்போது கொழும்பு மற்றும் நாடளாவிய ரீதியில் 20 கல்லூரிகள் இத்தகைமையினைப் புகட்டுகின்றன. இங்கு கடந்த சில வருடங்களாகத் தொடர்ச்சியாக உலக விருதினைப் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. கடந்த வருடம் சுரத் சந்திரசேன முகாமைத்துவ மட்டத்தில் தான் அமர்ந்த அனைத்து 6 பாடங்களுக்கும் உலகத்திலே முதன் முறையாக உலக விருதினைப் பெற்றுள்ளது இங்கு குறிப்பிடவேண்டிய விடயமாகும். மேலும் 2006 மற்றும் 2007ஆண்டுக்கான … ரையாளர் விருதினையும் மற்றும் 2008க்கான முதற்படி விருதினையும் இலங்கையே பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் எமது மொத்த செயற்பாட்டில் 70%இனை உட்கொண்டுள்ளது. இலங்கையில் காணப் படும் உக்கிரமான குறிகாட்டிச் செயற்றிட்டம் மற்றும் உட்கட்டுமான வசதிகள் நாம் தொடர்ந்து உயர் மட்டத்தினை எய்த பெரிதும் வழி கோலு கின்றன. தற்போதை உலகப் பொருளாதார நெருக்கடியின் காரணமாக எமது வளர்ச்சி அதி களவில் கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளிலேயே பெரிதும் நிகழ்கின்றது. இதன் காரணமாக எமது அமைவிடம் இச் செயற்பாட்டினைப் பூரணமாக நடைமுறைப் படுத்தி மேற்பார்வை செய்வதற்குப் பெரிதும் கைகொடுக்கின்றது. மேலும் இலங்கையில் காணப்படும் நிபுணத்து வத்தினை முற்றாகச் செயற்படுத்தி அண்மைய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளில் எமது செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னேற்றுவதற்கும் இது உதவுகின்றது.

கடந்த வருடம் நடத்தப்பட்ட எமது ஆய்வுகள் இலங்கையில் அதிகளவு மாணவர்கள் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் வருவதினை இனங்கண்டுள்ளது. CIMA பரீட்சைகள் மிகவும் கடினமானவை. எனினும் இலங்கையில் இதன் தேர்ச்சி தொடர்பாக எவ்வித ஐயமுமில்லை. அவர்கள் பல விருதுகளைத் தொடர்ந்து வெல்கின்றார்கள். எனினும் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு சவாலாக ஆங்கில மொழி திறன் காணப்படுகின்றதெனினும் அதனை முடிந்தளவு சீர் செய்வதற்காக நாம் எமது பாடத்திட்டங்களுடன் உப திட்டமாக ஆங்கில மொழிப் பயிற்சியினையும் தற்போது இணைத்துள்ளோம்.

இலங்கையில் எமது வெற்றி பெரிதளவாகக் காணப்பட்டாலும் CIMA கல்வித் தகைமையைப் பெறத் தேவைப்படும் நிதி தொடர்பாகவும் எமது மாணவர்கள் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். இப்பிரச்சினையை சீர்செய்யும் நோக்குடன் நாம் 5 வங்கிகளுடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு, அதனூடு எமது மாணவர்கள் CIMA விற்காக 6 மாத கால இலகுவான மீள்கொடுப்பனவு கடன் திட்டத்தினை பெறும் வாய்ப்பையும் எமது மாணவர்களுக்கு ஏற்பாடு செய்துள்ளோம். மேலும் கடந்த வருடம் CBA மட்ட பரீட்சையில் இலங்கை மாணவர்களுக்கென விசேடமாக 5 பவுண்ஸ் கட்டணத்தில் குறைக்கப்பட்டது. இதனை இவ்வருடமும் தொடர்ந்து செயற்படுத்துகின்றோம். பல கனவுகளை உடைய ஓர் குழந்தையின் வாழ்க்கையில் எம்மால் இயலும் முறைகளில் உதவி. இக்குழந்தை தனது கனவுகளை நனவாக மாற்றுவதற்கும் சர்வதேச நோக்கில் சிறந்து விளங்குவதற்கும் தேவையான உதவியையும் நாம் ஏற்படுத்திக் கொடுத்தல் முக்கியமாகும்.

**CIMA கல்வித் தகைமை இன்றைய சூழலில் காணப்படும் சவால்களுக்கு முகம் கொடுக்க எவ்வாறு அதனது மாணவர்களை தயார்படுத்துகின்றது?**

CIMA ஓர் தனிநபரினை மாற்றுகின்றது. அவரது வாழ்க்கை மற்றும் சிந்திக்கும் செயற்படும் திறனையும் மாற்றியமைக்கின்றது. இத் தலைமையுடன் இவர்கள் தாம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகளை நோக்கும் கண்ணோட்டம் வேறுபட்ட தாகக் காணப்படுகின்றது. CBA எனும் ஆரம்ப பாடத்திட்ட மானது 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட எவராலும் பெறக்கூடி யதாக அமைகின்றது. மேலும் இத்தகைமை வர்த்தகம், விற்பனை மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற பல்வேறுபட்ட அனைத்து தொழில்களுக்கும் அவசியமான அடிப்படை கணக்கியலினை புகட்டும் திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளமையால், பல மாணவர்கள் இதனை விரும்புகின்றனர்.


டொப் CIMA என்பது நடைமுறைகள் கல்வியைமையப் படுத் தியுள்ளது. அதாவது நடைமுறை யில் ஏற்படும் ஓர் பிரச்சினை தொடர் பாக நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக் கைகள், தீர்மானங்கள் மற்றும் செயற்பாடு களின் அறிவினை இது பரீட்சிப்பதுன் அதனை நடைமுறையில் காணப்படும் ஓர் நிறுவன பிரச்சினைக்கான தீர்வாக மாற்று வதற்கும் வழிகோலுகின்றது. எனவே ஓர் CIMA மாணவர்கள், நடைமுறையில் காணப்படும் ஆனால் உயர்மட்டத்தில் தீர்வினை செயற்படுத்த முடியாத சவால்களை தீர்க்கும் அறிவினை இதனூடு பெற்றுக் கொள்கின்றனர். இவ்வளவு உயர் சிந்தனை மட்டத்தினையே CIMA கல்வித்தகைமை புகட்டுகின்றது.

CIMA ஓர் தனிநபரினை மாற்றுகின்றது. அவரது வாழ்க்கை மற்றும் சிந்திக்கும் செயற்படும் திறனையும் மாற்றியமைக்கின்றது. இத்தகைமையுடன் இவர்கள் தாம் மேற்கொள்ளும் தீர்மானங்கள்மற்றும் செயற்பாடுகளை நோக்கும் கண்ணோட்டம் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது.


தற்போது காணப்படும் உலக பொருளாதார நெருக்கடியில் CIMA மாணவர்களின் பங்கேற்பு மிக்க முக்கியத்துவம் பெற்றுள்ளது. தற்போது பெரிதும் பாதிப்படைந்த நிறுவனங்களை நாம் உற்றுநோக்குவோமாகில், அவை அனைத்தும் இழப்பு, வாய்ப்பு தொடர்பாக எவ்வித நேர்த்தியான செயற்திட்டங்களை திட்டமிடாது நிகழ்காலத்தைக் கருத்திற்கொண்டு செயற்பட்டு வந்த அமைப்புக்களாகும். எனினும் CIMA மாணவர்களின் தேர்ச்சி, குறிக்கோள் மற் றும் செய்திறன் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இழப்பு வாய்ப்பினை இனங்கண்டு அதனை எதிர்வுகூறி எம்மட்டத்தில் அந்நிறுவனம் பிழையான தீர்வுகளை மேற்கொண்டுள்ளது என்பதை தெள்ளத்தெளிவாக இனங்காணும் திறமையினைப் பெற்றுள்ளனர். மேலும் செயற் திட்ட ஆலோசனை போன்ற துறைகளில் எமது மாணவர்கள் மேலும் அதிகளவு தொழில்வாய்ப்பினைப் பெறுவர் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இறுதியாக பாடசாலைக் கல்வியானது எமது அறிவினையும் சிந்தனையையும் வளர்க்கின்றது. எனினும் தொழில் சார் தேர்ச்சிக் கல்வியானது எமது தொழில் நிலைமையை நேர்த்தியாக செயற்படுத்த அதில் முன்னேற தேவையான தீர்வாக ஆய்வுத் திறனை வழங்குகின்றது. எனவே இது இரண்டும் ஓர் நபரின் வாழ்க்கையில் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றன - இதனையே CIMA கல்வித் தகைமை வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்களை ஒட்டி கடைசி வாரப் பொங்கலின் போது பன்றித்தலைச்சியம்மன் அடியார்களுக்கு அருள் காட்சி வழங்க வீதியுலா வருவதையும், அடியார்கள் அம்மனை வழிபட்டு நல்லாசி பெற்ற பின்னர், அங்கேயே சமைத்து உண்பதையும் படங்களில் காணலாம். (படம்: கதிரவேலு)




வல்லை வைத்தீஸ்வரர் ஆலய தேர்த்திருவிழாவின் போது வைத்தீஸ்வரர் ரத பவனிக்காக ஆலயத்தில் இருந்து பல்லக்கில் வெளியே வருவதை முதலா[illegible] படத்திலும், வைத்தீஸ்வரர் சுவாமியை ஆலய முன்றலில் இருந்து ரத பவனியாக அடியார்கள் இழுத் துச் செல்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்: சுந்தா)

## புலம்பெயர்ந்த தமிழர்களின் போராட்டத்தினால் வீரவன்ஸ கொதிப்பு

புலம்பெயர் நாடுகளில் தமிழர்கள் நடத்திவரும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்காக தனது சொந்த ஊரான தங்காலைக்கு சென்ற மகிந்தவை அவரது தங்காலை இல்லத்தில் செவ்வாய்க்கிழமை சந்தித்த விமல் வீரவன்ஸ புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தபோதே இந்த வேண்டுகோளையும் விடுத்ததாகக் கூறப்படுகின்றது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை சிறிலங்காப் படையினர் முடிவுக்கு கொண்டு வரும் வேளையில் புலம்பெயர் தமிழர்கள் நடத்தும் போராட்டங்கள் அனைத்துலக ஏகாதிபத்தியவாதிகளின் சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்திவிடும் என்றும் விமல் வீரவன்ஸ இந்த வேண்டுகோளில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எனவேதான் அனைத்துலக நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாது புலம்பெயர் தமிழர்களின் போராட்டங்களையும் உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் விமல் வீரவன்ச மகிந்தவிடம் எடுத்துக் கூறியிருக்கின்றார். (50)

## ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பான சி.டி.: தேர்தல் அதிகாரி மீது காங்கிரஸ் முறைப்பாடு

சென்னை , ஏப். 17

காங்கிரஸ் கட்சிக்கு எதிரான - இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த சி.டியைத் தடை செய்யக்கோரி அளித்த மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை - என்று தமிழகத் தேர்தல் ஆணையம் மீது அந்தக் கட்சி முறைப்பாடு தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக, மத்திய அரசு மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக காட்சிப் படங்களுடன் கூடிய சி.டியை பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டது. ஏற்கனவே, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சி.டிக்கள் பலரையும் சென்றடைந்துள்ளன. அதைத் தடை செய்யக்கோரி தமிழகக் காங்கிரஸ் கட்சி சார்பில் தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தாவிடம் மனு அளிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினை குறித்து கருத்துத் தெரிவித்த நரேஷ் குப்தா, சி.டி. விவகாரம் குறித்த முறைப்பாட்டு மனு மாநில பொலிஸ் துறை தலைவரிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது மாநில அரசு தொடர்பான விவகாரம் - என்றார்.

இந்த நிலையில், சி.டி. பிரசாரத்தைத் தடுக்க, தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சட்டப் பேரவைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் டி.சுதர்சனம் குற்றம்சாட்டியுள்ளார்.

சி.டி.க்களைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளை தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி மேற்கொள்வார் என்று நம்புகிறோம். இல்லையென்றால், தமிழகத்தில் ஒரு அசாதாரண சூழ்நிலை ஏற்படும் என்று சுதர்சனம் கூறினார்.

இதுகுறித்து சட்டம், ஒழுங்கு கூடுதல் டி. ஜி.பி. டி. ராஜேந்திரனிடம் கேட்ட போது -

பெரியார் திராவிடர் கழகம் சார்பில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து வெளியிடப்பட்ட சி.டிக்கள் எங்காவது திரையிடப்படுகின்றனவா என்பது குறித்து தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள அனைத்து மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன - என்றார்.

## உண்மையே பேசி நன்மையே கிடைக்க உறுதி பூணுவோம்!

ஞானக்கதிர்

புத்தாண்டு பிறந்திருக்கின்றது. எனவே இனி நாம் மகிழச்சியுடன் மங்களகரமாக வாழ் வதற்கு வழிபிறக்க வேண்டும். வாழ்வில் அமைதியும், சாந்தியும், சமாதானமும் ஏற்பட நாம்தான் முயற்சி செய்யவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக மனிதன் முதலில் மனிதனாக வாழப் பழக வேண்டும். அதற்கு நம்பிக்கை மிகவும் அவசியம். கடவுள் ஒருவர் இருக்கின்றார். அவர் தான் நமக்கு எல்லாமே. ஆகவே அவரை வழிபாடியற்றி வாழ்வில் துன்பம் நீங்கி இன்பம் பொங்க நாம் வேண்டுதல் செய்ய வேண்டும்.

எப்போதும் உண்மையைப் பேசி நன்மை பயக்கக் கூடிய நல்ல காரியங்களையே செய்தல் வேண்டும். மறந்தும் மற்றவர் மனம் புண்படப் பேசக்கூடாது. கூடிய மட்டும் எப்போதும் எந்நேரமும் இன்சொல் பேச வேண்டும். நாக்கிலே நல்ல வாக்கு வரவேண்டுமாயின் உள்ளம் சுத்தமாக இருத்தல் மிக மிக அவசியம். ''உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது'' இதையே வள்ளுவப் பெருந்தகையும் ''வெள்ளத்தனைய மலர் நீட்டம்; மாந்தர்தம் உள்ளத்தனைய உயர்வு '' என்று தமது திருக்குறள் இரண்டடிப் பாட்டில் அழகாகக் கூறியுள்ளார். இது படிக்குந்தோறும் உண்மை இனிக்கிறது. நாம் செய்தது நமக்குத்தானேயொழிய வேறொருவருக்குமில்லை. ஒரு சுவரில் பந்தை விட்டெறிந்தால் அது நம்மிடமே வருவதுபோல நாம் நல்லது செய்தால் நல்லது கிடைக்கும்.

இப்பூவுலகில் நாம் சகல சௌபாக்கியங்களும் கைவரப்பெற்றுச் சந்தோஷமாக வாழ வேண்டுமாயின் எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானின் திவ்விய திருக் கடாட்சம் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

''ஆசையறாய் பாசம்விடாய் ஆன சிவபூசை பண்ணாய்; நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்'' என்ற பாடல் வரிகளை நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். இந்த உலகில் ஆசை கூடக்கூட அவலமும் கூடிக்கொண்டே போகும். முதலில் நாம் ஆசையைக் கைவிட வேண்டும். ''ஆசை அறு மின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்'' என்பதைச் சிரமேற்கொண்டு நாம் நமது ஆசைகளை ஒழிக்க வேண்டும்.

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது'' என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் கூற்றுப்படி நாம் எப்போதும் அறவாழ்க்கையை வாழ நம்மை நாமே தயார்ப் படுத்திக்கொள்ள வேண்டும். இந்த உடம்பு உள்ளபோதே ஆண்டவனுக்குத் தொண்டு செய்யப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் பூவுலக வாழ்வின் மகிமையை, மகத்துவத்தை மிகவும் உணர்ந்து, இனிமேல் நன்மை யைச் செய்து நலமுடன் வாழ நம்மை நாமே பழக்கப்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும். அதற்கும் அவன் திருவருளை நாடி வணங்கி வாழ்த்திச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்போமாக.

சைவப்புலவர் இ[illegible]

முதலாவது பிறந்ததின வாழ்த்து

Happy Birthday

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவப்பிரம்மஸ்ரீ விக்கினேஸ்வரக் குருக்கள்– ரதீபா தம்பதியாரின் செல்வப் புதல்வன் பிரணவித்ய சர்மா ([illegible]) தனது ஆயுஷ்ஹோம விழாவையும் முதலாவது பிறந்ததின விழாவையும் (17.04.2009) இன்று வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை சொர்ணசித்தி விநாயகர், வாலாம்பிகா சமேதவைத்தீஸ்வரர் பெருமான், மஞ்சவனப்பதி முருகன் திருவருளுடன் பல்கலைகளும் கற்று சகல ஐஸ்வரியங்களுடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென

அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, அம்மம்மா, அத்தைமார், மாமாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

தாத்தா– சிவப்பிரம்மஸ்ரீ சொ.இரத்தினசபாபதிக்குருக்கள்.

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(84406)







பிரணவித்ய சர்மா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

The Director, Course Director and Staff of the IIS Cordially Invite

Patrons, Friends and Well-wishers to the

## 13th Institute Day

Celebration
at the
Jubilee Hall
St.John's College, Jaffna
on
Saturday the 18th April 2009.

## சுஜீவா வைத்தியசாலை அறிவித்தல்

25ஆவது அனுராதபுர பாரம்பரிய களத்தாவ, பாலிநகர் மற்றும் காரைநகரில் முன்னர் கிளைகளைக் கொண்டிருந்த பக்கவிளைவில்லாத இந்திய, இலங்கை சித்த ஆயுள்வேத தமிழரச பாரம்பரிய சுதேச மருத்துவ முறைகள் மூலம் தீராத நோய்களை நீக்குவதிலும் விசேடமாக குழந்தையின்மை சிகிச்சையில் பிரபலமானதுமான சுஜீவா வைத்தியசாலை தற்போது இல.6, கலட்டி அம்மன் கோயில் வீதி, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (தட்டாதெரு சந்திக்கு அருகில்) எனும் முகவரியில் மட்டுமே இயங்கிவருகிறது.

★ பொறுப்பு வைத்தியர்: திருமதி ச.ஜெயலன் DAM.RIMP
★ ஏனைய வைத்தியர்கள்: K.O. இராஜரட்ணம், ஜெ.ஜெயலன்
★ பார்வையிடும் நேரம்: காலை 6.00-11.00 தொ.பே.: 0775594147
மாலை 3.00- 6.00 தொ.பே.: 0772487044
★ வெள்ளிக்கிழமை விடுமுறையாகும்.

குறிப்பு: குழந்தையின்மை சிகிச்சை பெற வருபவர்கள் தயவுசெய்து காலையில் வரவும்.

Dr.ஜெ.ஜெயாலன்.

(சி/557879)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 17 |
| 04 | 04 |
| 1941 | 2005 |



### அமரர் கார்த்திகேசு குலேந்திரன்

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது.

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

ஆனைக்கோட்டை.
(84151)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 18 |
| 07 | 03 |
| 1922 | 2009 |



### அமரர் சின்னப்பா தியாகராசா

கடந்த 18.03.2009 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (17.04.2009) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு, கைதடி. (84446)
குடும்பத்தினர்.

## தோட்டக் காணி விற்பனைக்கு

அளவெட்டி, டச்சு றோட்டில் 8 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
காலை 9 மணியிலிருந்து
மாலை 6 மணிவரை
2447436

## தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.17

மேல் மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இது வரை 88 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளன என அந்த நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவற்றில் பாரதூரமான வன்முறைச் சம்பவங்களாக 32 முறைப்பாடுகளும், பொதுவான வன்முறைச் சம்பவங்களாக 56 முறைப்பாடுகளும் தமக்குக் கிடைத்துள்ளன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாரதூரமான சம்பவங்களில் பெரும்பாலானவை கடுவளை தேர்தல் தொகுதியிலேயே இடம்பெற்றுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தில் 35 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும், கம்பஹா மாவட்டத்தில் 27 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும், களுத்துறை மாவட்டத்தில் 26 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## பெந்தெகோஸ்தே சபையின் வருடாந்த ஒன்றுகூடல்

வண்ணை,ஏப்.17

இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் வருடாந்த ஒன்றுகூடலும் சுவிசேஷ ஆராதனைகளும் கடந்த 15ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறுகின்றன.

யாழ். கண்டி வீதியில் அமைந்துள்ள மேற்படி சபை மண்டபத்தில் தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வுகள் இரவு 7.30 மணி வரை நடைபெறுகின்றன. (50-160)

## வாராந்த ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி,ஏப்.17

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் 'தேவி பாகவதம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

இந்த நிகழ்வு பேரவைத் தலைவர் க. அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும்.

(204-236)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ முருகன் பாமசி
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## பிற்போடப்பட்டுள்ளது

### யாழ்ப்பாண சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

இம்மாதம் 18, 19ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வில் ஏராளமானோர் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்திருப்பதால், அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க பிற்போடப்பட்டு மிகப் பாரியளவில் மேற்கொள்ளப்படுவதற்காக மே மாதம் 07, 08, 09, 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கௌரவ செயலாளர்: ஜெ.ஜெயாலன்,
வடஇலங்கை சுதேச மருத்துவ சபை,
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி,
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0775594147, 0772487044.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### திருமதி இராசரத்தினம் நல்லம்மா

தோற்றம்
15 ★ 02 ★ 1933

மறைவு
28 ★ 04 ★ 2008

திதி: 17.04.2009 (அட்டமி)

பாசத்தின் உறைவிடமாய் எம் வாழ்வின்
ஒளிவிளக்காய் திகழ்ந்த எம் அன்னையே!
நீங்கள் எமைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் துயர்.

இ.திருநாவுக்கரசு,
மீனாட்சி அம்மன் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (84434)
குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

### பெரியதம்பி வரதநேரு

(க.பொ.த.உயர்தர 13ஆம் ஆண்டு கலைப்பிரிவு மாணவன்,
மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவ தலைவன்)




நினைத்தது ஒன்று
நடந்தது வேறு

கல்வியிலும் சகல கலைகளிலும்
வல்லவனாய்
பள்ளியிலே குருகுலத்தாரினதும்
கூட்டத்தாரினதும்
பழகியோர் மனங்களிலும் தடம்
பதித்தவனே
பண்பின் சிகரமாய் நேரு என்று
நேசிக்கப்பட்டவனே
பெற்றாரும், உடன் பிறப்புக்களும்
உன் பெருமதிப்பை எதிர்பார்க்க
அறிவிலி கூட்டத்தாரின் அடாவடியால்
எமையெல்லாம்
பாதி வழியினிலே பிரிந்து சென்றாய்
எங்கள் வீட்டின் சுடர் விளக்காய்
மிளிர்ந்த குலவிளக்கே
மிளிர்ந்த சுடர் விளக்கு
அணைந்ததினால்
எம் வீடு இன்று இருள் படிந்ததுவே
இறைவா எங்களுக்கு ஏன்
இத்துயர்நிலை
மாறாது மாறாது நின் பிரிவுத் துயர்.

*நீங்கா நினைவுகளுடன்:*
அன்பு தந்தை, தாய்
பெரியதம்பி, பெ.நாகேஸ்வரி.
ஆழியவளை, தாளையடி.
(84405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 14

சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA**
**(Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

**10.04.2009 Continuity.....**

06. I must work to live well.
நான் நன்றாக வாழ்வதற்கு உழைக்கவேண்டும்.

07. You must finish the work to get your salary.
நீ உன்னுடைய சம்பளத்தைப் பெறுவதற்கு வேலையை முடிக்கவேண்டும்.

08. I must get up at five tommorow.
நான் நாளை ஐந்துமணிக்கு எழும்பவேண்டும்.

09. We must tell mother.
நாங்கள் அம்மாவுக்குச் சொல்லவேண்டும்.

10. He must find out what's happening.
என்ன நடக்கிறது என்பதை அவன் கண்டுபிடிக்கவேண்டும்.

11. I really must stop smoking.
நான் உண்மையில் புகைத்தலை நிறுத்தவேண்டும்.

**01. Walk (quickly) என்ற வினைச்சொல்லுடன் How என்ற வினைச்சொல்லைச் சேர்த்து வினையடையாக எழுதவும்.**

| | |
|---|---|
| ☆ How does he walk? | அவன் எவ்வாறு நடக்கிறான்? |
| He walks quickly. | அவன் வேகமாக நடக்கிறான். |
| Does he walk quickly? | அவன் வேகமாக நடக்கிறானா? |
| Yes, He walks quickly. | ஆம், அவன் வேகமாக நடக்கிறான். |
| No, He does not walk quickly. | இல்லை, அவன் வேகமாக நடக்கவில்லை. |
| ☆ How do they walk? | அவர்கள்எவ்வாறு நடக்கிறார் கள்? |
| They walk quickly. | அவர்கள்வேகமாக நடக்கிறா ர்கள். |
| Do they walk quickly? | அவர்கள் வேகமாக நடக்கிறார்களா? |
| Yes, They walk quickly. | ஆம், அவர்கள் வேகமாக நடக்கிறார்கள். |
| No, They do not walk quickly. | இல்லை, அவர்கள் வேகமாக நடக்கவில்லை. |

**02. Live (happily) என்ற வினைச்சொல்லுடன் How என்ற வினைச்சொல்லைச் சேர்த்து வினையடையாக எழுதவும்.**

| | |
|---|---|
| ☆ How does he live? | அவன் எவ்வாறு வாழ்கிறான்? |
| He lives happily. | அவன் மகிழ்ச்சியாக வாழ்கிறான். |
| Does he live happily? | அவன்மகிழ்ச்சியாக வாழ்கி றானா? |
| Yes, He lives happily. | ஆம், அவன் மகிழ்ச்சியாக வாழ்கிறான். |
| No, He does not live happily. | இல்லை, அவன் மகிழ்ச்சியாக வாழவில்லை. |
| ☆ How do they live? | அவர்கள் எவ்வாறுவாழ்கிறார்கள்? |
| They live happily. | அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். |
| Do they live happily? | அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்களா? |
| Yes, They live happily. | ஆம், அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். |
| No, They do not live happily. | இல்லை, அவர்கள் மகிழ்ச்சியாக வாழவில்லை. |

## ADJECTIVES - பெயர் உரிச்சொற்கள்.

ஒரு பெயரை விசேடிக்கும் சொல்லை நாம் பெயர் உரிச்சொல் என்று சொல்கின்றோம். இதனைப் பெயரெச்சம் என்றும் அழைப்பர்.

உதாரணம் :-
1. இராமன் நல்ல பையன்.
2. என்னிடம் ஒரு வளைந்த தடி இருக்கிறது.
3. நான் ஒரு பெரிய மேசையைக் காண்கிறேன்.

இவற்றில் உதாரணமாக அமையும் முதல் சொற்றொடரைக் கவனிக்கவும். 'நல்ல' என்ற சொல் பையன் என்ற பெயர்ச்சொல்லை விசேடித்து நிற்கிறது. எனவே நல்ல என்ற சொல்லை நாம் பெயர் உரிச்சொல் என்று சொல்கின்றோம்.

இரண்டாவது உதாரணத்தில் ஒரு, வளைந்த என்ற இரு சொற்களும் சேர்ந்து தடியை விசேடிக்கின்றன. எனவே இவ்விரு சொற்களும் பெயர் உரிச்சொற்கள் ஆகும்.

மூன்றாவது உதாரணத்தில் ஒரு, பெரிய ஆகிய இரு சொற்களும் மேசை என்ற பெயர்ச்சொல்லை விசேடித்து நிற்பதால் இவ்விரண்டும் பெயர் உரிச்சொற்கள் ஆகும்.

இரண்டாவது உதாரணத்திலும் மூன்றாவது உதாரணத்திலும் 'ஒரு' என்ற சொல்லைக் கவனிக்கவும். அங்கு 'ஒரு' என்பது அடுத்து வந்துள்ளவையும் வளைந்த, பெரிய ஆகிய இரு சொற்களையும் விசேடிப்பதை காணலாம். இங்கு எச்சங்கள் அல்லது உரிச் சொற்கள் அல்லவா விசேடிக்கப்படுகின்ற என்ற சந்தேகம் எழலாம். சந்தேகம் சரியானது தான். உரிச்சொற்களை விசேடிக்கக்கூடியவற்றை எச்ச உரிச்சொற்கள் என்று வேண்டு மானால் அழைக்கலாம். ஆங்கிலத்தில் உரிச்சொற்களை விசேடிக்கக்கூடிய சொற்களையும் வினை உரிச்சொற்கள் என்ற பிரிவிலேயே அடக்கி Adverb என்று அழைக்கின்றனர்.

கீழே சில சான்றுகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் அடிக்கோடிட்ட சொற்கள் பெயர்ச்சொற்களை விசேடிப்பவை ஆகும்.

01. சுகுமாரன் ஒரு புத்திசாலிச் சிறுவன்.
02. நான் அந்தச் சிறுவனைக் காண்பதில்லை.
03. அவர்கள் நான்கு பசுக்களைக் காண்கின்றார்கள்.
04. அவன் ஒரு சோம்பேறிச் சிறுவன்.
05. கோட்டை ஒரு பெரிய நகரம்.
06. நான் மேசைமீது சில புத்தகங்களைக் காண்கின்றேன்.
07. என்னிடம் போதுமான பேனாக்கள் இருக்கின்றன.
08. இச்சிறுவன் நிற்கிறான்.
09. இந்தச் சிறுவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்.
10. அந்தச் சிறுவர்கள் ஓடுகிறார்கள்.

தமிழ் மொழியில் பெயர்ச்சொற்களுக்கு முன்னால் பெயர் உரிச்சொற்கள் பயன் படுத்தப்படுகின்றன என்பதை நாம் அறிந்துகொண்டோம். ஆங்கில மொழியில் அத்தகைய அமைப்பு உண்டென்றாலும், பெயர்ச்சொற்களுக்குப் பின்னாலும் சில வேளைகளில் பெயர் உரிச்சொற்கள் வந்து அமைவதை நாம் காணலாம்.

உதாரணம் :
1. The lazy boy does not learn.
சோம்பேறிச் சிறுவன் படிப்பதில்லை.
2. That boy is lazy.
அந்தச் சிறுவன் சோம்பேறியாக இருக்கிறான்.

| Adjective | Meaning |
|---|---|
| a, an | ஒரு |
| clever | புத்திசாலித்தனமான |
| that | அந்த |
| this | இந்த |
| one | ஒன்று |
| two | இரண்டு |
| three | மூன்று |
| four | நான்கு |
| five | ஐந்து |
| six | ஆறு |
| seven | ஏழு |
| eight | எட்டு |
| nine | ஒன்பது |
| ten | பத்து |
| eleven | பதினொன்று |
| twelve | பன்னிரண்டு |
| thirteen | பதின்மூன்று |
| fourteen | பதின்நான்கு |
| fifteen | பதினைந்து |
| sixteen | பதினாறு |
| seventeen | பதினேழு |
| eighteen | பதினெட்டு |
| nineteen | பத்தொன்பது |
| twenty | இருபது |
| twenty one | இருபத்தொன்று |
| twenty two | இருபத்திரெண்டு |
| twenty three | இருபத்திமூன்று |
| twenty four | இருபத்திநான்கு |
| twenty five | இருபத்தைந்து |
| twenty six | இருபத்தாறு |
| twenty seven | இருபத்தேழு |
| twenty eight | இருபத்தெட்டு |

Adjective சேர்ந்து அமையும் சில ஆங்கிலச் சொற்றொடர்களும் அவற்றின் பெயர்களும் கீழே தரப்பட்டுள்ளன.


| | | |
|---|---|---|
| 01. | Sukumaran is a clever boy. | சுகுமாரன் ஒரு புத்திசாலிச் சிறுவன். |
| 02. | I do not see that boy. | நான் அச்சிறுவனைக் காண்பதில்லை. |
| 03. | They see four cows. | அவர்கள் நான்கு பசுக்களைக் காண்கிறார்கள். |
| 04. | He is a lazy boy. | அவன் ஒரு சோம்பேறிச் சிறுவன். |
| 05 | Fort is a big town. | கோட்டை ஒரு பெரிய நகரம். |

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் வியாழக்கிழமை இலகுவழி ஆங்கிலம் - 15 இல் வெளிவரும்.

**மேலதிக தொடர்புகளுக்கு :-**
**உதயன் கல்விச்சுடர்,**
**361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி -**
**071-4273035,021-2223837**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வன்னி மாவட்டத்தில் செட்டிக்குளத்தி லுள்ள கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் வங்கி கள், தபாலகம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்றவை தற்காலிகமாக அமைக் கப்பட்ட கொட்டகையில் இயங்கி வருகின் றன. இலங்கை வங்கியும் தனது சேவையை அங்குள்ள இடம்பெயர்ந்த மக்களுக்காக ஆற்றி வருகின்றது.

இலங்கை வங்கிக்கான கொட்டகையில் இலங்கை வங்கி உத்தியோகத்தர் கே.ஜெயச் சந்திரன் செயற்படுவதையும் அருகில் மக்கள் குழும்பி இருப்பதையும் முதல் படத்தில் காண லாம்.

மேற்குறிப்பிட்டஸ்தாபனங்கள் வரிசை யில் அமைந்திருப்பதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

# நீண்ட கால மோதல் நிறுத்தம் சாத்தியமற்றது பிரிட்டனின் கோரிக்கைக்கு இலங்கை அரசு பதில்

கொழும்பு, ஏப்.17

மோதல் பகுதியில் சிக்கியுள்ள பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு வசதியாக நீண்டகால மோதல் இடை நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு பிரிட்டன் விடுத்த வேண்டு கோளை ''சாத்தியமற்றது'' என்று இலங்கை அரசாங்கம் நிரா கரித்து விட்டது.

விடுதலைப்புலிகளின் போக்கால் இந்த நீண்டகால மோதல் நிறுத்தம் சாத்தியமற்றது என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்பான்ட் உடனான தொலைபேசி உரை யாடலின் போதே வெளிவிவகார அமைச் சர் ரோஹித போகொல்லாகம தெரிவித் துள்ளார்.

விடுதலைப்புலிகள் பொதுமக்களை சுதந்திரமாக வெளியேற அனுமதிப்பது தொடர்பாக எந்தவொரு இதயசுத்தியுட னான தன்மையை வெளிப்படுத்த தவறி விட்டதால் நீண்ட காலத்திற்கு மோதலை நிறுத்துவது சாத்தியமற்றது என்பதை போகொல்லாகம வலியுறுத்தியுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு புத்தாண்டை முன் னிட்டு மோதல் இடைநிறுத்தத்தை இரு நாள்களுக்கு அறிவித்திருந்தது. மோதல் வலயத்தில் இருக்கும் பொதுமக்கள் பாது காப்பாக வெளியேற அதனை நீடிக்க வேண் டும் என்று மிலிபான்ட் கடந்த ஞாயிற்றுக் கிழமை தெரிவித்திருந்தார்.

மோதல் சூனியப் பகுதியில் தமது நிலைகளைப் புலிகள் வலுப்படுத்தி வரு வது தொடர்பான விசனத்தையும் அமைச் சர் போகொல்லாகம பிரிட்டிஷ் வெளி விவகார அமைச்சரிடம் கூறியிருக்கிறார்.

பொதுமக்களை வெளியேற அனுமதிக் குமாறு பிரிட்டனும் சர்வதேச சமூகமும் விடுதலைப்புலிகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்கவேண்டுமென்று வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியிருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 18 ★ 06 ★ 1927



மறைவு 18 ★ 03 ★ 2009

### அமரர் விசுவன் சின்னப்பிள்ளை

கடந்த 18.03.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 17.04.2009 வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும் இந் நிகழ்விற்கு வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் இலகுப்பிள்ளை

புங்குடுதீவு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாக லிங்கம் இலகுப்பிள்ளை நேற்றுமுன்தினம் (15.04.2009) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாக லிங்கம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் தம்பு - இராசமணி தம்பதியினரின் அன்பு மரு மகனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும் தேவதாஸ், மோகன் தாஸ், தேவகுமாரி (கனடா), மோகனகுமாரி (கனடா) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், சந்திரரூபி (புங்குடுதீவு மகாவித்தியா லயம், ஆசிரியை), சிவனேந்தி (கனடா), மோகனராஜ் (கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை, கந்தையா மற்றும் நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தவமணி, அருளம்மா மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், றொசா யினி, தமிழினி, கோபிகிருஷ்ணா, லக்ஷியா, சாகித்தியா, ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.04.2009) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.தேவதாஸ்
(தேவன் - மகன்)

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.



### தாமோதரம்பிள்ளை யோகநாதன் (English Master)



வண்ணார்பண்ணை, சிவலிங்கப் புளிய டியை பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் தற்போது தெஹிவளை யில் வசித்தவருமாகிய தாமோதரம்பிள்ளை யோகநாதன் 14.04.2009 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோ தரம்பிள்ளை - தில்லையம்மா தம்பதியின ரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற துரைராஜா - சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும், காந்திமதி யின் அன்புக் கணவரும், Dr.சுதர்சினி (காசல் மகளிர் வைத்திய சாலை), தனுஷாந்தினி (விரிவுரையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், தெஹிவளை), குகதீபன் ஆகியோரின் பாசமிகு தந் தையும், கனகேஸ்வரி, அழகேஸ்வரி, கயிலைநாதன், இராம நாதன், சர்வேஸ்வரி காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் அற்புத நாதனின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நாளைமறுதினம் (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை வைக்கப்பட்டு நண்பகல் 12 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோ.சுதர்சினி (மகள்).
யோ.தனுசாந்தினி (மகள்).

12, ½,சாள்ஸ் இடம்,
தெஹிவளை.
(0602136780)


## இயல், இசை, நாடக வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.17

கலாக்ஷேத்திரா கல்வி நுண்கலை வளாகத்தில் இடைநிலை உயர்கல்வி மாணவர்களுக்கான சங்கீதம், நடனம், சித்திரம், நாடக வகுப்புகள் ஆரம்பமாகி யுள்ளன.

அத்துடன் நவீன கிண்டர்காடின் முறை யில் முன்பள்ளியும் தொடங்கப்பட்டுள் ளது.

இங்கு பாடசாலை மாணவர்களுக்கான விசேட மனிதவள தலைமைத்துவ ஆளுமை அபிவிருத்திச் செயலமர்வுகள், பயிற்சிப்பட்டறைகள், கற்றல் வள நிலைய சேவை என்பன பல்வேறு செயற்பாடுக ளுடன் தொலைக்காட்சி விவரங்கள், குறும் படத் தயாரிப்பு, படப்பிடிப்பு, நடிப்பு தொடர்பான பாடநெறிகளும் ஆரம்பிக்கப் படவுள்ளதாக வளாகத்தின் முதல்வர் பா. தனபாலன் தெரிவித்துள்ளார்.

(50)


### தவறிவிட்டது

பாடசாலை வீதி, ஆறுகால்மடம் ஆனைக் கோட்டை என்னும் முகவரியுடைய உருத்திர குமார் விஜயமணி என்பவரது தே.அ.அட்டை (645234111V) 09.04.2009 அன்று இணுவில் மஞ்சத்தடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள், பிள்ளையார் கோயிலடி, உடுவில் தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

### தவறிவிட்டது

இணுவில் மேற்கு, இணுவில் என்னும் முக வரியுடைய நிஷா குலநாயகம் என்பவரது தே. அ.அ. (846543104V) மற்றும் விசேட அடையாள அட்டை, தொழில்நுட்பக் கல்லூரி அ.அ. என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்.நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ... உதயன் பத்திரிகை ... மனோகராச் சந்தி யாழ். என்னும் இடத்தில் ஒப்படைக்கவும். T.P.021 222 2927, 8802.


## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்.மாவட்டத்தில் பணிபுரிகின்ற சித்த மருத்துவர்கள், ஆயுள்வேத மருத்து வர்கள், தனியார் மருத்துவர்களுக்கான காச நோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத் தரங்கு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 2 மணியளவில் பண் ணையிலுள்ள மார்பு நோய் சிகிச்சை நிலை யத்தில் இடம்பெறவிருப்பதாக வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா தெரிவித்துள் ளார்.

(9)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07.07.1984
மறைவு: 17.04.2008

### லோகநாதன் வசந்தருபன்

காற்றோடு கலந்து ஆண்டு
-ஒன்று ஆனதுவே
கண்ணீரில் கலந்து நாம் மண்ணில்
-புலம்புகின்றோம்
எம்மோடு உரையாட மீண்டும்
- நீ வாராயோ !

இல: 9/12, சென். ஜேம்ஸ் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
சகோதரர்கள்.



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை நவரட்ணராசா

(முன்னாள் மின் பொறியியலாளர், யாழ்.மாநகரசபை)



என் கல்வி உயர்வின் உந்துசக்தி மண் டைதீவு வான்மதி விளையாட்டுக் கழகத் தினை வளர்க்க என் உடன் இணைந்து உறுதுணை நின்றவர்.

அவர் பிரிவில் எங்கள் கழக உறுப் பினர்கள், ஊரவர்களுடன் மிகவும் வருந்துகின்றேன். அமரரின் ஆத்ம சாந் திக்காக பிரார்த்திக்கின்றேன்.

ஆ.த.சிவபரஞ்சோதி J.P., தமிழ்நாடு (சென்னை).
(ஸ்தாபக செயலாளர், மண்டைதீவு வான்மதி விளையாட்டுக் கழகம்).



## நினைவாராதனையும் நன்றி நவிலலும்

தோற்றம் 02.05.1939



மறைவு 05.03.2009

வல்வெட்டித்துறை நெடியகாட்டைச் சேர்ந்தவரும் மட்டக்களப்பில் வசித்தவருமான

### அமரர் செபஸ்தியாம்பிள்ளை பேனாட்குணசிங்கம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர் - நில அளவைத் திணைக்களம்)

"எனக்கோ பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது சிறிய தொரு பந்தயத்தில் ஓடினேன் ஓட்டத்தை முடித்துவிட் டேன் விசுவாசத்தைப் பாதுகாத்தேன். (2திமொத்: 4:6,7)

கடந்த 05.03.2009 அன்று காலமான அன்னாரின் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும், கடிதம்மூலமும் எமது துயரில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் நினைவுத் திருப்பலி நாளை (18.04.2009) சனிக்கிழமை காலை 7 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத் தில் நடைபெறும். அதில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம இளைப் பாற்றுக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

செ.அன்ரன் இரத்தினசிங்கம்
மற்றும் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலிய நாடுகளில் முக்கிய கட்டத்தில் உண்ணாநிலைப் போராட்டங்கள்

## பெரும் எண்ணிக்கையில் புலம்பெயர் தமிழர்கள் திரண்டுள்ளனர்

தமிழர் தாயகத்தில் இடம்பெறும் இனப் படுகொலையைக் கண்டித்து அனைத்து லக நாடுகளில் முழுவீச்சில் நடத்தப்பட்டு வரும் சாகும்வரையான உண்ணா நிலைப் போராட்டங்கள் உணர்வுபூர்வமான நிலையை அடைந்துள்ளன.







பிரித்தானியாவில்...

பிரித்தானியாவில் நடைபெற்றுவரும் போராட்டத்தில் நேற்றும் 10ஆவது நாளாக சாகும்வரை உண்ணாநிலை இருக்கும் சுப்பிரமணியம் பரமேஸ்வரனின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதால் அங்கு ஒருவித அச்ச உணர்வு மக்கள் மத்தியில் எழுந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டம் நடத்தப்படும் இடத்திற்கு இரவு-பகலாக சென்றுகொண்டிருக்கின்றனர்.

உண்ணாநிலை இருக்கும் சுப்பிரமணியம் பரமேஸ்வரனை கைகூப்பி வணங்கி கண்ணீர் மல்க அவர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

சிறியோர் தொடக்கம் முதியோர் வரை வயது வேறுபாடின்றி இரவு-பகல் பாராது மேற்படி போராட்டத்தில் கலந்துகொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அதேநேரம் மருத்துவக் குழுவினர் சுப்பிரமணியம் பரமேஸ்வரனின் அருகே இருந்தவாறு அவரது உடல்நிலையைப் பரிசோதித்து வருவதுடன் தமது கவலையையும் வெளியிட்டுள்ளனர்.

கனடாவில்...

கனேடிய தலைநகர் ஒட்டாவாவில் உள்ள நாடாளுமன்ற முன்றிலில் கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் தமிழர்கள் முன்னெடுத்துவரும் கவனயீர்ப்பு முற்றுகைப் போராட்டம் நேற்று 8 ஆவது நாளாகத் தொடர்ந்தும் மக்கள் எழுச்சியுடன் நடத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் இத்தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஆறு தமிழ் உறவுகளால் தொடரப்படும் சாகும்வரையிலான உண்ணாநிலைப் போராட்டம் 7ஆவது நாளாக நடைபெறுகின்றது.

யோகேந்திரன் (வயது 54), சிவனேஸ்வரி (வயது 59), துளசிகாமணி (வயது 74), ஜூலியஸ் ஜேம்ஸ் (வயது 34), புஸ்பராஜமணி (வயது 46), தையல்நாயகி (வயது 67) ஆகியோரே உண்ணாநிலைப் போராட்டத்தினை நடத்திவருகின்றனர்.

இவர்களில் ஜூலியஸ் ஜேம்சின் உடல் நிலை பாதிக்கப்பட்டதால் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் தன்னுடைய உண்ணா நிலைப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என அவர் தெரிவித்திருக்கின்றார்.

ரொறன்ரோ, ஒட்டாவா, மொன்றியல் ஆகிய கனேடியப் பெருநகரங்களில் இருந்து மக்கள் பெருமளவில் இப்போராட்டத்திற்கு வந்து செல்கின்றனர்.

அவுஸ்திரேலியாவில்...

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சிட்னி, மெல்பேர்ன் ஆகிய நகரங்களில் உண்ணாநிலைப் போராட்டத்தை தொடங்கிய ஆறு தமிழ் இளையோர்கள் அவுஸ்திரேலியாவின் தலைநகரான கன்பராவுக்கு தமது போராட்டத்தை நகர்த்தியிருக்கின்றனர்.

சிட்னியில் உண்ணாநிலைப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த சுதா தனபாலசிங்கம், மதிவண்ணன் சின்னத்துரை, பிரதீபன் இராஜதுரை ஆகியோரே 103 மணித்தியாலத்துக்கு அதிகமாக நீர் ஆகாரம் எதுவுமின்றி உண்ணாநிலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்குப் போராட்டத்தை தொடங்கியிருந்த இவர்கள், பின்னர் அவுஸ்திரேலியாவின் தலைநகரான கன்பரா நாடாளுமன்றத்துக்கு அருகாமையில் இருக்கும் பிரதமரது இல்லத்துக்கு அருகில் உள்ள மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நகர்த்தி அங்கிருந்தவாறு உண்ணாநிலைப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளையில் சிட்னி உண்ணாநிலைப் போராட்டம் நடத்துபவர்களுடன் இணைந்து மெல்பேர்ணில் உண்ணாநிலைப் போராட்டத்தை நடத்திவந்த ரமணா, ப.தெய்வீகன் மற்றும் கோ.பானு ஆகியோர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை முதல் கன்பராவில் இணைந்து தமது உண்ணாநிலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

காற்றுடன் கூடிய கடும் குளிருக்கு மத்தியில் இவர்கள் உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயிரக்கணக்கான தமிழ் மற்றும் வேற்று இனமக்கள் அங்கு குழுமி நின்று இவர்களுக்கு தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

அதேவேளையில் சிட்னி, மெல்பேர்ன், கன்பராவை தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் அமைப்புக்கள் அவுஸ்திரேலிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்து இந்தப்போராட்டம் குறித்து விளக்கமளித்து வருகின்றனர்.

இதேவேளையில் அவுஸ்திரேலியாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஸ்ரீபன் சிமித் இந்த உண்ணாநிலைப் போராட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழர்கள் வன்முறையில் நாட்டம் அற்றவர்கள் எனவும் இந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆனால் தாயகத்தில் அல்லற்படும் உறவுகளுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தகுந்த பதில் தரும் வரை தமது உண்ணாநிலைப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனக் கூறி உண்ணாநிலைப் போராட்டம் நடத்திக்கொண்டிருப்பவர்கள் மறுத்துவிட்டனர். (50)

# கிருஸ்ணா அம்பலவாணர் சுவிஸ் பொலிஸாரால் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்



ஜெனிவா,ஏப்.17

சுவிற்சர்லாந்தில் சாகும்வரை உண்ணாநிலைப் போராட்டத்தை மேற்கொண்டு வந்த சுவிஸ் தமிழர் பேரவையின் இணைப்பாளர் கிருஸ்ணா அம்பலவாணரின் உடல் நிலையைக் கருத்திற்கொண்டு அந்நாட்டு காவல்துறையினர் அவரை வலுக்கட்டாயமாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

வன்னியில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு எதிராக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணி முதல் அவர் சாகும்வரையிலான உண்ணாநிலைப் போராட்டத்தைத் தொடங்கியிருந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை கிருஸ்ணா அம்பலவாணரின் உடல் நிலையை மருத்துவர்கள் பரிசோதித்தனர். அவரது உடல் நிலை மோசமடைந்திருப்பதால் உடனடியாகச் சிகிச்சை பெறவேண்டும் என அவர்கள் அறிவுறுத்தினர்.

எனினும் தனது கோரிக்கைகள் நிறைவேறும்வரை மருத்துவச் சிகிச்சையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று தெரிவித்தார்.

இதனையடுத்து சுவிஸ் காவல்துறையின் மருத்துவப் பிரிவினர் அழைக்கப்பட்டனர். சுமார் நான்கு மணிநேரமாக அவரை மருத்துவச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்ல சுவிஸ் காவல்துறை மருத்துவப் பிரிவினர் முயன்றபோதும் அது கைகூட வில்லை.

எனவே சம்பவ இடத்திற்கு சுவிஸ் காவல்துறையினர் இரவு 8 மணியளவில் வருகை தந்து அவரை வலுக்கட்டாயமாக நேயாளர் காவு ஊர்தியில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

கிருஸ்ணா அம்பலவாணர் உண்ணா நிலையில் இருந்தபோது அவரை சுவிஸ் அரசாங்கத்தின் வெளிவிவகாரத்துறை அமைச்சக அதிகாரிகள் சந்தித்து கலந்துரையாடியதுடன், தமிழ்மக்களுக்கான இத்தகைய போராட்டத்தை வேறு வழியில் முன்னெடுத்துச் செல்லுமாறு அறிவுரை வழங்கியிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் அவரை தொடர்புகொண்டு உண்ணாநிலைப் போராட்டத்தைக் கைவிடுமாறும் சிறிலங்கா அரசாங்கத்துடன் தாம் பேச்சு நடத்தி வருவதாகவும் கேட்டுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50)

# இலங்கையில் போர் நிறுத்தம்: நாடகம் என்கிறார் பாண்டியன்

சென்னை,ஏப்.17

இலங்கையில் புத்தாண்டைக் கொண்டாடுவதற்காகவே போர் நிறுத்தம் அறிவித்துள்ளனர் அதுவும் நாடகம்தான். இலங்கை இராணுவத்தால் கடந்த திங்கட்கிழமை கூட (13ஆம் திகதி) அப்பாவித் தமிழர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். - என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் தா. பாண்டியன் குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை துறைமுக நுழைவு வாயிலில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

தமிழ்நாட்டில் புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. இதேபோல், இலங்கையிலும் புத்தாண்டைக் கொண்டாடவே 2 நாள்கள் போர் நிறுத்தத்தை அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. அதுவும் நாடகம்தான். தமிழ்நாட்டில் சிலர் பேரணி நடத்தியதால் தான், இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்பட்டது எனக் கூறுகின்றனர்.

மக்களை ஏமாற்றுவதை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும் - என்றார்.

# எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.17

எலிக் காய்ச்சல் நோயினால் இலங்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஆசிய பிராந்தியத்தில் எலிக் காய்ச்சல் நோயினால் அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்படும் நாடுகளில் இலங்கை முதலிடம் வகிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த 2008ஆம் ஆண்டில் மட்டும் எலிக் காய்ச்சல் நோயினால் சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளதுடன், 6ஆயிரம் பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் கொழும்பு, கம்ஹா, கண்டி, ரத்தினபுரி, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் எலிக் காய்ச்சல் நோய் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடப்படுகிறது. (50)

# அவுஸ்திரேலியக் கடற்பரப்பில் தத்தளித்த 50 இலங்கையர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு

சிட்னி,ஏப்.17

அவுஸ்திரேலிய கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த 50 இலங்கை சட்ட விரோத குடியேற்றவாசிகள் மீட்கப்பட்டு கிறிஸ்மஸ் தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு குடிவரவு திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த இலங்கையர்களுக்கு மருத்துவ சோதனைகள் நடத்தப்பட உள்ளதாக குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க மேற்கொண்ட முயற்சியின் நோக்கம் குறித்து ஆராயப்பட்டதன் பின்னர் அவர்களுக்கு அவுஸ்திரேலிய வீசா வழங்குவதா அல்லது நாடு கடத்துவதா என்பது பற்றித் தீர்மானிக்கப்படும் எனக் குடிவரவுத் திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த 50 சட்டவிரோத குடியேற்றவாசிகளை எல்லைப் பாதுகாப்புப் பிரிவினர் மீட்டுள்ளதாகவும், குறித்த நபர்கள் தங்களை இலங்கையர்கள் என அடையாளப்படுத்திக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சாதாரண தர மாணவருக்கு வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஏப்.17

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு இழந்த கல்வியை மீட்கும் செயல்திட்டம் நாளை சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

சோஆ நிறுவன அனுசரணையுடன் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கொடிகாமம் அரசினர் வித்தியாலத்தில் இயங்கும் பாடசாலையில் இத்திட்டத்தை ஆரம்பித்துவைப்பார்.

கட்டாய பாடங்களான தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் ஆகிய ஐந்து பாடங்களுக்கும் பாடசாலை நாள்களில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மேலதிக வகுப்புகள் நடைபெற ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)

# தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் எனத் தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் முன்னர் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (204)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 ★ 11 ★ 1942



உதிர்வு 21 ★ 04 ★ 2006

**அமரர் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை**
(J.L.S. லொறி உரிமையாளர்)

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவில் தெரிவது ஆசைமுகம்
குடும்பத்தின் உயர்வுக்காக என்றும்
வாழ்ந்தவரே எங்கள் அப்பா!
ஆண்டு மூன்றுகள் சென்றாலும்
மாறவில்லை உங்கள் நினைவுகள்
புத்துயிர் மூலம் ஒரு வாரிசாக
வந்து பிறக்க வேண்டும்.

பொன் கந்தையா வீதி,
நெல்லியடி.

குடும்பத்தினர். (C/556071)

## கண்ணீர் அஞ்சலி

நேற்று16.04.2009வியாழக்கிழமை இறைபதமடைந்த விநாயகர் இன்ஜினியரின் வேக்சொப் உரிமையாளரான

(உப்பு மடம் சந்தி கோண்டாவில்)

**செல்லையா தில்லையம்பலம்**

அவர்களின் பிரிவுத்துயரால், துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருநா மர அரிவு ஆலை
பெற்றோல் செற்முன் ஒழுங்கை, மானிப்பாய்
திபோஸ் பாடி தச்சுத் தொழிற்சாலை
யாழ் வீதி, மானிப்பாய்.

திருநாவுக்கரசு குடும்பத்தினர் (84458)

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.பரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திருநாவுக்கரசு நாயனார் பற்றிய பேச்சும், பஞ்சபுராணம் ஓதலும் இடம் பெறும். (204)

# உதைபந்தாட்டப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஏப்.17

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் பாடசாலைகளுக்கிடையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகச் சம்மேளனத்தின் மாவட்ட இணைப்பாளர் பேர்ட்டி பனிஸ்ரர் அறிவித்துள்ளார்.

போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (50-9)

# நலன்புரி நிலையத்துக்கு சென்று வந்தபோது நகை திருட்டு

வண்ணை, ஏப்.17

சித்திரைப் புதுவருட தினத்தன்று நலன்புரி நிலையங்களுக்குச் சென்று திரும்பிய பிரயாணிகளிடம் சிற்றூர்திகளில் முடிச்சுமாறிகள் தமது கைவரிசையைக்காட்டியுள்ளனர்

யாழ்-அடப்பன் வீதியைச் சேர்ந்த ஐஸ்கோவர் கவிதாயினி என்பவரது ஒரு வயது நிரம்பிய கைக்குழந்தை அணிந்திருந்த காப்பு களவாடப்பட்டுள்ளது. (அ-160)

# தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர் நிதியத்துக்கு நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.17

தென்மராட்சி பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவின் தலைவராக மு.காசித்தம்பியும், செயலாளராக க.அருணாசலமும் பொருளாளராக டாக்டர் இ.கந்தையாவும் நிர்வாக சபை உறுப்பினர்களாக செ.சுப்பிரமணியம், ச.தாமோதரம்பிள்ளை, க.சிவசம்பு ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (50-207)

## தேவை

யாழ்.மெ ன் வீதியில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலையான "பிலிப்ஸ் நேசிங் ஹோம்" (PHILLIPS NURSING HOME) இற்கு ஒபரேசன் தியேட்டர் அனுபவமுள்ள மருத்துவ சிகிச்சை அனுபவமுள்ள மருத்துவ தாதிகள் தேவை. தாதிய சேவையை பழக விரும்புபவர்களுக்கும் சிறந்த வழிகாட்டலின் கீழ் பயிற்றுவிக்கப்படும்.

நேர்முகத் தேர்வு-19.04.2009 (ஞாயிறு)
காலை 8 மணி-10.30 வரை
(PHILLIPS NURSING HOME)
221, மோரின் வீதி,யாழ்.சிறைச்சாலை முன்பாக)
யாழ்ப்பாணம். தொ.பே:- 021 2224172

# தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாத உயர்தர மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.17

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் போது சகல மாணவர்களும் தமது தேசிய அடையாள அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் எனப் பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தும் அவற்றை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது விண்ணப்பப் பத்திர இலக்கத்துடன் மாவட்டச் செயலகத்திலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறும், இதுவரை தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத மாணவர்களின் விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபர் மூலம் 30 ஆம் திகதி அனுப்பிவைக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (50)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் க.இரத்தினசபாபதி அவர்களின் அன்பு மாமனார்

**வேலுப்பிள்ளை இராசையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/போக்கட்டி அ.த.க. பாடசாலை, கொடிகாமம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## பதவி வெற்றிடம் - கணக்குப்பிள்ளை

மேற்குறித்த பதவிக்கு முன்அனுபவமுள்ள களஞ்சியம்- மற்றும் வரவு செலவுக் கணக்குகளைச் செய்யத் தெரிந்த சைவ ஒழுக்கமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

கடமைநேரம் காலை 6.00 முதல் மாலை 6.00 மணிவரை -மதியபோசனவேளை நேரம் ஒதுக்கித்தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும். 30.04.2009 க்கு முன்பு கீழ்க் கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர்
கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம்,
கரவெட்டி.

## CBM

33, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
T.P No: 6196 H.P: 0777 110756

வங்கித்துறை கற்கைகள் CBF, DBF ஆரம்பம்
18.04.2009 ( சனி) - மாலை 3மணி
சகல பாடங்களும் நடைபெறும்.

இயக்குனர்
ந. உமாகாந்த்

## யாழ்.கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியம்

ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார்.
(புலம்:-3:31)

நாளை(18.04.2009) சனிக்கிழமை வழமையான சபைகள் இணைந்து நடத்தும் தேசத்திற்கான ஐக்கிய உபவாசம் காலை 9.30 மணிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் நடைபெறும். எல்லோரும் கலந்து ஜெபிக்க வரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | - ஜெயஜீவிய சபை | (ஆனைப்பந்தி) |
| உடுவில் | - கல்வாரி சபை | (மானிப்பாய்) |
| வட்டுக்கோட்டை | - மீட்பின் குரல் சபை | (பண்டத்தரிப்பு) |
| அச்சுவேலி | - நாற்சதுர சபை | |
| தீவு | - ஜெப ஆலயம் | |

யாழ்.ஐக்கிய நிர்வாகம். (84467)

## ஏல விற்பனை அறிவித்தல்

### தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 31.03.2008 வரை அடகு வைத்து 31.03.2009 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஏல விற்பனைத் திகதி:
23.05.2009 (சனிக்கிழமை)
காலை 8.30 மணி.**

| கிளையின் பெயர் | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>சுன்னாகம்<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி | யாழ்ப்பாணக் கிளை<br>இல: 496, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே: 021 222 2696 |

**ஏல விற்பனை இரத்துச் செய்யும் / ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது**

NSB
உதவிப் பொது முகாமையாளர் (கடன்)
தேசிய சேமிப்பு வங்கி
தலைமை அலுவலகம், கொழும்பு - 03

# உடுவில் பிரதேச தடகளப் போட்டிகள்

வலி.வடக்கு,ஏப்.17

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமையும், எதிர்வரும் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன. போட்டிகள் காலை 8 மணி முதல் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலாளர் திருமதி சதீசன் மஞ்சுளா தேவி தலைமை [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (50-86)

## Vacancy

Multi marketing LTD is an essential food provider in Sri Lanka with community enhancement strategies to eliminate poverty. Being an equal opportunity employer, we are looking for exceptionally skillful individuals to join our rapidly expanding operations.

**Marketing Officers - 50 Positions**

**Job Profile**

You will be required to identify and encourage the consumer to buy the essential products from our institution and implementing towards achieving team sales target; maintain an appropriate rapport with the consumer to continue the business with us and also you should be able to understand the actual needs of the society for their personal development.

**Required Qualifications:**

Should passed in Advance level examination
Should have a valid motor bike license
Marketing qualification will be an added advantage
He/She should be a good negotiator with good communication, leadership and moral qualities

**ATTRACTIVE REMUNERATION PACKAGES WITH ADDED BENEFITS ARE ON OFFER FOR THE ABOVE POSITION BASED ON THE TARGET ACHIEVEMENTS.**

Women are encouraged to apply

Please send in your completed CV with names and contact details of two non-related referees on or before 22nd of April 2009 to the following address:

**Advt: No-3893
C/O Uthayan
361,Kasthuriyar Road,
Jaffna.**

(84462)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மார் சிறையிலுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்குக!

## ஐ.நா. செயலருக்கு அமெ. செனட்டர் கடிதம்

வாஷிங்ரன், ஏப்.17

மியான்மாரில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி அந்நாட்டு இராணுவ ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்க வேண்டும் என ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு அமெரிக்க செனட் உறுப்பினர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

முன்பு பர்மா என்று அழைக்கப்பட்டுவந்த மியான்மாரில் தற்போது இராணுவ ஆட்சி நடைபெற்று வருகின்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இங்கு இல்லை. இதனால் அந்நாட்டு மக்கள் மிகுந்த துயரத்தில் இருக்கின்றனர்.

ஜனநாயகம் கோரி போராட்டம் நடத்தும் எதிர்க்கட்சியினரை இராணுவ ஆட்சியாளர் கைது செய்து சிறையில் அடைக்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவரும் நோபல் பரிசு வென்றவருமான ஆங்சான் சூகி உட்பட ஏராளமானோரை இராணுவம் சிறைப்பிடித்து சிறையில் அடைத்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் வலியுறுத்தியும் கூட அரசியல் தலைவர்களை விடுதலை செய்ய அந்நாட்டு இராணுவ அரசு மறுத்துவிட்டது. இந்நிலையில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு அமெரிக்க செனட் சபையின் பெண் உறுப்பினர்கள் சிலர் கடிதம் எழுதியுள்ளனர்.

பர்மா மக்களையும் அரசியல் கட்சித் தலைவர்களையும் மியான்மார் இராணுவ அரசு தொடர்ந்து ஒடுக்கி வருகிறது. எதிர்க் கட்சித் தலைவர் ஆங் சான் சூ கி போன்ற ஏராளமான அரசியல் தலைவர்கள் சிறையில் அடைக் கப்பட்டுள்ளனர். அவர்கள் அனை வரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு அந்நாட்டு இராணுவ அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமென இவர்கள் தம் கடிதத்தில் கோரியுள்ளார்கள்.

இது போன்ற துணிகரமான நடவடிக்கைகளை இராணுவ அரசு தொடர்ந்து எடுக்க அனுமதிக்கக் கூடாது. ஆங் சான் சூகி, இராணுவ அரசு பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய முத்தரப்பு பேச்சுகள் நடத்த இராணுவ அரசை நிர்ப்பந்திக்க ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கேட்டுள்ளனர்.

மியான்மாரில் நடக்க இருக்கும் தேர்தல் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும். அரச உயர் பதவிகளில் பெண்களுக்கு இடம் கொடுக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். பெண்களுக்கு அரசு பதவிகளில் இடமளிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் இவர்கள் கோரியுள்ளனர்.

## பாலம் இடிந்து வீழ்ந்து 9 பேர் பலி

### பெரு நாட்டு மலைப் பகுதியில் சம்பவம்

லிமா, ஏப்ரல், 17

பெரு நாட்டின் ஏன்டியன் மலைப்பகுதியிலுள்ள கோரகோரா நகரில் அமைக்கப்பட்டிருந்த தொங்குபாலம் இடிந்து வி[illegible]ந்ததில் 9 பேர் உயிரிழந்தனர்.

இது தொடர்பாக கோரகோரா [illegible] பிதா வோல்டர் அன்தேஹுவா வானொலிக்கு அளித்துள்ள பேட்டியில், பள்ளிக்கு செல்வதற்காக கட்டப்பட்ட இந்தத் தொங்கு பாலத்தில் ஏராளமான மாணவர்கள் சென்று கொண்டிருந்த போது பாலம் அறுந்து விழுந்துள்ளது. இதில் சில மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். ஏராள மானவர்கள் காயமடைந்துள்ளனர் என்றார்.

காயமடைந்த மாணவர்களில் பெரும்பாலானவர்கள் 10 முதல் 13 வயதுக்கு உட்பட்டவர்கள். பலியானவர்களில் இருவர் ஆசிரியர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 40 மீற்றர் நீளமுள்ள தொங்கு பாலம், 320 அடி பள்ளத்தாக்குப் பகுதியில் கட்டப்பட்டிருந்தது. பாலத்திலிருந்து பள்ளத் தாக்கில் விழுந்து உயிரிழந்த மாணவர்களை மீட்பதற்காக ஹெலிகொப்டர்கள் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.



இஸ்ரேலிய ஜனாதிபதி சிமோ பெரஸ் (இடதுபுறம்), அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மத்திய கிழக்கிற்கான விசேட தூதுவர் ஜோர்ஜ் மிக்சேலுடன் ஜெருசலேமில் நேற்று வியாழக்கிழமை சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

## மும்பைத் தாக்குதலில் சிக்கியவரின் விசாரணைகள் வியாழன் ஆரம்பம்

மும்பை,ஏப்.17.

மும்பை தீவிரவாதத் தாக்குதல் வழக்கின் விசாரணை வியாழக்கிழமை ஆர்தர் சாலை சிறை வளாகத்தில் தொடங்கியது. இந்த விசாரணையையொட்டி தீவிரவாதி முகம்மது அஜ்மல் ஹஸாப் ஆஜர்படுத்தப்பட்டார்.

ஆர்தர் சாலை சிறையிலுள்ள தனி நீதிமன்றத்தில் இவ் விசாரணை ஆரம்பமாகியது. இதற்காக ஹஸாப்பை தனி நீதிபதி தஹிளியானி முன்னிலையில் பொலிஸார் ஆஜர் படுத்தினர். விசாரணையையொட்டி ஆர்தர் சாலை சிறைச்சாலைக்குள்ளும், வெளியிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 1500 பொலிஸாரும் மற்றும் பாதுகாப்புப் பண்டையினரும் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிறையைச் சுற்றியுள்ள சாலைகளில் போக்குவரத்துக்கு பெரும்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. சிறைக்கருகே வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. வெடிகுண்டுபோட[illegible]லும் சேதமடையாத அளவுக்கு ஹஸாப் உள்ள சிறைப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஹஸாப்பை சிறை அறையிலிருந்து நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்காக 20 அடி நீளமுடைய குண்டுகளால் துளைக்க முடியாத தனிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஏராளமான கண்காணிப்பு புகைப்படப் பிடிப்புக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

சிறைக்கு வெளியே இந்திய திபெத்திய எல்லைப் பாதுகாப்புப்படையினரின் உதவியுடன் உள்ளூர் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் பாகிஸ்தான் இனியும் தாமதம் செய்யாமல் மேலும் மேலும் விளக்கம் கேட்டுக்கொண்டிராமல் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்றும் முகர்ஜி கேட்டுக்கொண்டார்.

## வடமேற்கு பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்

### 9 பொலிஸார் உட்பட 18 பேர் உயிரிழப்பு; பலர் காயம்

இஸ்லாமாபாத்,எப்.17.

வட மேற்கு பாகிஸ்தானிலுள்ள ஷார்சதா என்னுமிடத்திலுள்ள சோதனைச்சாவடியில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 9 பேர் பொலிஸாராவர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

பெஷாவார் நகருக்கண்மையிலுள்ள ஷார்சதா நகரில் இந்தச் சோதனைச் சாவடி அமைந்துள்ளது. சோதனைக் குட்படுத்தப்படவிருந்த நபர் ஒருவர்தான் மறைத்துவைத்திருந்தகுண்டை வெடிக்க வைத்துள்ளார் என்றும் அது குறிப்பிட்டது.

இக்குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது. அருகிலுள்ள கட்டடங்களின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கிச் சிதறின.. குண்டு வெடிப்பால் மின் கம்பிகளும் துண்டிக்கப்பட்டன. இதனால் இப்பகுதியே அந்தகாரத்துக்குள் மூழ்கியது என சோதனைச் சாவடியைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி பி.பி.ஸி.க்குத் தெரிவித்தார்.

சுவாத் பள்ளத்தாக்கிலுள்ள தீவிரவாதிகளில் சிலர் பெஷாவாருக்குள் நுழைந்து, பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் என எமக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதனால் இச்சோதனைச் சாவடியில் பெருமளவிலான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என பெஷாவார் பிரதமபொலிஸ் அதிபர் சிப்வாத் ஹையூர் குறிப்பிட்டார்.

உலக அரங்கில்

## பொப் பாடகர் ஜக்சனின் பொருள்கள் கண்காட்சி

வாஷிங்ரன்,ஏப்,17.

பொப் பாடகர் மைக்கேல் ஜக்சனின் பொருள்கள் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.இப்பொருள்கள் ஏலம் விடப்படும் என முன்னர் அறிவித்தல் விடுக்கப்பட்டது.எனினும் பின்னர் ஏல விற்பனை இரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

மைக்கேல் ஜெக்சன் பயன்படுத்திய கிட்டத்தட்ட 1400 பொருள்கள் பிவர்லிஹில்ஸ் நகரில்,30 ஆயிரம் சதுர அடி பரப்பில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

ஜக்சனுக்கு பரிசாக வழங்கப்பட்ட கிரீடம், சிம்மாசனம், பல நினைவுப் பொருள்கள் ஆகியவை ஏலத்தில் விடப்படவிருந்தன. எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை இவை ஏலம் விடப்படும் என்றும் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் ஏலத்தில் விடப்படவிருந்த பல பொருள்களை மீளத் தருமாறு கோரி ஏல நிறுவனத்துக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் மைக்கேல் ஜக்சன் வழக்குத் தொடர்ந்தார்.

இதைத் தொடர்ந்து ஏல நிறுவனத்துக்கும் ஜேக்சனுக்கு மிடையே ஓர் ஒப்பந்தம் ஏ[illegible]பட்டது. இதன் விளைவாக ஏல விற்பனை கைவிடப்பட்டது.

அதேவேளை ஜக்சனின் பொருள்கள் தொடர்ந்தும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஹங்கேரியின் புதிய பிரதமருக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டம்

புடாபெஸ்ட், ஏப். 16

ஹங்கேரியின் புதிய பிரதமராக கோர்டன் பாஜ்னாய் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு கடும் ஆட்சேபனை கிளம்பியுள்ளது. தலைநகரான புடாபெஸ்டில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசுக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்கள். புதிய பிரதமரை நாம் ஏற்கமாட்டோம் என்றும் கோஷமெழுப்பினார்கள்.

கோர்டன் பஜ்னால் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் புதிய பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார். 386 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 204 வாக்குகளால் இவர் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

முன்னைய பிரதமர் பேரேன் கயூர் சிஸானி மார்ச் மாதம் பதவி துறந்ததை அடுத்து கோர்டன் பஜினாய் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பஜ்னாய் கட்சி சார்பற்றவர். பொருளாதார அமைச்சராகப் பதவி வகித்து வந்தவர்.

இவர் செவ்வாய்க்கிழமை புதிய பிரதமராக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். இதற்கு ஆட்சேபனை தெரிவித்து தலைநகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எதிரணியினருக்கும் பொலிஸாருக்கு மிடையே மூண்ட மோதலில் இரு தரப்பிலும் பலர் காயமடைந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதித் தடைகளை அகற்ற முற்பட்டார்கள். சிலர் சுற்றி வளைத்து நின்ற பொலிஸாரை மோட்டார் சைக்கிள்கள் மூலமாக ஊடுருவ முனைந்தார்கள். இதனையடுத்து பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த தடுப்புகளையும் அகற்றிவிட்டு உள்ளேபுக முயற்சித்தார்கள். பொலிஸாரால் இவர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டது.

## அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறியோர் 1.19 கோடியினர்!

நியூயோர்க்,ஏப்.17.

அமெரிக்காவில் சட்டவிரோத குடியேற்ற வாசிகளின் எண்ணிக்கை 1.19 கோடி என சமீபத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத குடியேற்ற வாசிகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தோரும் அடங்குவர் என்றும் இந்த ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது.

அமெரிக்க மக்கள் கணக்கெடுப்புக்கழகம், 2008 ஆம் வருட மார்ச்சில் குடியேற்ற வாசிகள் தொடர்பான தகவலல்களைத் திரட்டியது. இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பியூ ரிஸேர்ச் என்னும் ஆய்வுமையம் தன் ஆய்வை மேற்கொண்டது.

இந்த ஆய்வின் முடிவில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. இந்தஅறிக்கையில் குடியேற்றவாசிகளில் 83 இலட்சம் பேர் குறைவான வருவாய் கிடைக்கும் பல்வேறுபட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை அமெரிக்க மொத்தத் தொழிலாளர் தொகையில் 5.4 சதவீத மென கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்துக்கு விரோதமாக அமெரிக்காவில் தங்கியுள்ளவர்களில் 76 சதவீதமானோர் ஹிஸ்பேனிக் பிரிவைச்சேர்ந்தோராவர். 70 இலட்சம் பேர் மெக்ஸிக்கோ நாட்டைச் சேர்ந் தோராவர் என்றும் ஆய்வறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

உரிய ஆவணம் இன்றி அமெரிக்காவில் தங்கியிருப்பவர்களில் 11 சத வீதமானோர் ஆசியா, மத்தியஅமெரிக்கா ஆகியவற்றைச் சேர்ந்தோராவர். 7 சதவீதமானோர் தென்அமெரிக்காவைச் சேர்ந்தோராவர் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்களைப் போன்றுஉரிய ஆவணமின்றி தங்கியிருக்கும் எஞ்சியோரில் 4 சத வீதமானோர் கர்பியன் தீவுப் பகுதிகளைச் சேர்ந்தோர். 2 சதவீதமானோர் அரபு நாடுகளைச் சேர்ந்தோர்என்றும் அதில் விவரிக்கப்பட்டுள்ளது.

## சீக்கியரின் தாடியை அகற்றியமைக்காக அமெ. வைத்தியசாலை நிர்வாகம் நஷ்டஈடு

நியுயோர்க்,ஏப்,17

சீக்கியர் ஒருவரின் தாடியை அகற்றியமைக்கு நஷ்டஈடாக வைத்தியசாலை நிர்வாகம் 30 இலட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

நியுயோர்க்நகரில் வசித்துவந்த இந்திய வம்சாவளி சீக்கியரான பியாராசிங்ஹானஸ்ரா உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் அங்குள்ள வைத்தியசாலையொன்றில் சேர்க்கப்பட்டார்.

அவரது குடும்பத்தினர் வைத்தியசாலை நிர்வாகத்திடம் தங்கள் மத வழக்கப்படி பியாராசிங்கின் தலைமுடி, தாடி மீசை ஆகியவற்றை அகற்றக்கூடா என முன்கூட்டியே தெரிவித்து நிர்வாகத்தின் கையெழுத்தையும் வாங்கிக்கொண்டனர்.

2007 ஆம் ஆண்டு முதல் பியாராசிங் அங்கு சிகிச்சை பெற்றுவந்தார். இந்நிலையில், புதிதாக வந்த நேர்ஸ் ஒருவர் பியாராசிங்கின் தாடியை அகற்றிவிட்டார். இந்த சம்பவம் நடந்த ஒரு மாதத்தில் அவர் இறந்து விட்டார்.

இதைத் தொடர்ந்து அவர் குடும்பத்தினர் வைத்தியசாலை நிர்வாகம் மீது தாங்கள் வழக்கு தொடரப்போவதாக அறிவித்தனர். இதையடுத்து வைத்தியசாலை நிர்வாகம் பியாராசிங் குடும்பத்துடன் பேச்சுக்கள் நடத்தியபோது இழப்பீடாக ரூ.30 இலட்சம் கொடுக்கமுன்வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமையான போர் நிறுத்தம் வலியுறுத்துகிறார் கருணாநிதி

## ஐ.நாவின் அழுத்தத்தை மதியாத அரசு இலங்கை எனவும் சாடல்



சென்னை, ஏப். 17

இரண்டு நாட்கள் மட்டுமே போர் நிறுத்தம் செய்துள்ள இலங்கை அரசு, முழுமையான போர் நிறுத்தம் செய்தால்தான் என்ன? மத்திய அரசு அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் - என்று முதல்வர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

மேலும், உலக நாடுகளும், ஐ.நா.சபையும் கொடுக்கும் அழுத்தத்தையே மதிக்காத அரசாக இலங்கை அரசு இருக்கிறது என்றும் அவர்சாடியுள்ளார்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கிள்ளிக் கொடுக்கும் பண்டத்துக்கும் அள்ளிக் கொடுக்கும் பண்டத்துக்கும் உள்ள வேறுபாட்டை நான் உணருகிறேன். முழுமையான போர் நிறுத்தம் செய்தால்தான் என்ன முழுகிப் போய்விடும்?

ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, சட்டப் பேரவையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வருவதற்குக்கூட எதிர்க்கட்சிகளை அனுமதிக்கவில்லை. ஆனால் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசுக்குத் தொடர்ந்து நாங்கள் அழுத்தம் கொடுத்து வருகிறோம் என்பதை தமிழக மக்களும் இலங்கைத் தமிழர்களும் அறிவார்கள். உலக நாடுகளும், ஐ.நா.சபையும் கொடுக்கும் அழுத்தத்தையே மதிக்காத அரசாக இருக்கிறது இலங்கை அரசு.

சோனியா காந்தி 2004-ம் ஆண்டில் பிரதமர் பதவி தனக்குத் தேவையில்லை என்று கூறியதைவிட ஜெயலலிதா பிரதமர் பதவி தேவையில்லை என்று கூறியது எவ்வளவு பெரிய தியாகம்? திருமங்கலம் இடைத்தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை. இதில் பிரதமர் பதவியா?

இலங்கைத் தமிழர்களுக்காக அரசு சார்பில் வசூலிக்கப்பட்ட நிவாரண நிதியை கருணாநிதி அவருடைய குடும்ப நிதியில் சேர்த்துக் கொண்டாரோ என்ற எண்ணம் மக்கள் மனதில் எழுந்துள்ளது என்று ஜெயலலிதா கூறியிருந்தார். இதற்கு மன்னிப்புக் கேட்காவிட்டால் வழக்குத் தொடருவேன் என்று கூறியிருந்தேன். அதற்கு மக்கள் சொல்வதாகத்தான் அவர் கூறினார் எனப் பதிலளித்தார். எனவேதான் இப்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரு குற்றச்சாட்டினைக் கூறும்போது ஆதாரத்தோடு கூறவேண்டும். சொல்லுவதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு சொல்ல வேண்டும் - என்றுள்ளது.

# இலங்கை மீனவர் 45 பேர் விடுவிப்பு

சென்னை, ஏப். 17

இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 45 பேர் கடந்த திங்களன்று விடுதலை செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் கடல் பகுதியில் அத்துமீறி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 64 பேர் கைது செய்யப்பட்டு அண்மையில் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்களை விடுவிப்பது குறித்து இலங்கை தூதரக அதிகாரிகள் மற்றும் சென்னை கலெக்டர் தலைமையிலான ஒருங்கிணைப்புக் குழு கூடி பேச்சு நடத்தியது. அதன்பின், சிறையில் அடைக்கப்பட்டிருந்த 45 மீனவர்கள் கடந்த திங்களன்று விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் வந்த 8 படகுகளும் விடுவிக்கப்பட்டன.

# மஹிந்தவின் உண்மையான நண்பராக செயற்படுகின்றார் முதல்வர் கருணாநிதி

## பழ.நெடுமாறன் சாட்டை



சென்னை, ஏப். 17

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உண்மையான நண்பராக முதல்வர் கருணாநிதி செயற்படுகிறார் - என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளர் பழ.நெடுமாறன் சாட்டையடி கொடுத்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள சிலரின் வழிகாட்டுதலின்பேரில் தவறான அணுகுமுறைகளை விடுதலைப் புலிகள் கடைப்பிடிப்பதால்தான் இலங்கைப் பிரச்சினை இன்னும் முடிவுக்கு வராமல் இருக்கிறது என்று கருணாநிதி அண்மையில் கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

போர் நிறுத்தம் என்ற பெயரில் இரு நாட்களாக அதிகமான படைகளைக் கொண்டு வந்து குவிக்கின்றனர்.

ஆனால் கருணாநிதியும், ப.சிதம்பரமும் தங்களது முயற்சியால்தான் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது என்பது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த செய்த முயற்சி ஒரு நாடகமே என்பது நிரூபணமாகிவிட்டது.

அன்னையர் முன்னணி அமைப்புத் தலைவர் சரஸ்வதி தலைமையில் நூறு பெண்கள் ஈழத் தமிழர்களுக்காக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்த பொலிஸாரிடம் அனுமதி கேட்டார்கள். அனுமதி கிடைக்கவில்லை. தனியார் இடங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த முயன்று அவர்கள் ஒவ்வொரு இடமாகத் துரத்தப்பட்டு வருகிறார்கள்.

ஈழத் தமிழர்கள் துரத்தி அடிக்கப்படுகின்றனர். கருணாநிதியோ தமிழக தமிழர்களை விரட்டி விரட்டி அடிக்கிறார். மஹிந்த ராஜபக்ஷவின் உண்மையான நண்பராகக் கருணாநிதி திகழ்வதைக் கண்டிக்கிறேன் - என்றுள்ளது.

# ராஜீவைக் கொல்ல வேண்டும் என்ற நோக்கம் நளினிக்கு இருக்கவில்லை!

## பிரியங்கா தெரிவிப்பு



புதுடில்லி, ஏப். 17

எனது தந்தை ராஜீவ் காந்தியைக் கொல்ல வேண்டும் என்ற தீய நோக்கம் நளினிக்கு இருந்ததாகத் தெரியவில்லை. தன்னைச் சூழ்ந்திருந்த சிக்கல்களால் கொலைச் சதிக்கு நளினி உடந்தையாகிவிட்டார்என்றே தெரிகிறது - என்று பிரியங்கா தெரிவித்துள்ளார்.

பழிவாங்க வேண்டும்; தீங்கு செய்ய வேண்டும் என்ற நோக்கம் நளினிக்கு இருந்ததாகத் தெரியவில்லை. மேலும் பெரிய கொடூரத்தைச் செய்ய துணை போகிறோம் என்பதையும் அவர் உணர்ந்திருந்ததாகத் தெரியவில்லை.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்ட நளினியை கடந்த ஆண்டு வேலூர் சிறையில் பிரியங்கா சந்தித்தார். இந்தச் சந்திப்பு அப்போது பரபரப்பாக பேசப்பட்டாலும் சந்திப்பின் நோக்கம் பற்றியோ நளினியிடம் பிரியங்கா பேசிய விவரங்களோ முழுமையாக வெளிவரவில்லை.

இந்த நிலையில், தற்போது தேர்தல் பிரசாரத்தையொட்டி செய்தியாளர்களை அடிக்கடி சந்திக்கும் பிரியங்கா, தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் நளினியைச் சந்தித்தமை பற்றி குறிப்பிட்டார். எனது தந்தை ராஜீவ் காந்தியை கொல்ல வேண்டும் என்ற நோக்கம் இல்லாமலேயே, நளினி இந்தக் குற்றத்தைச் செய்திருக்கலாம். நளினியைச் சிறையில் சந்திக்கும்போது அவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன்.



தந்தையை இழந்து நான் துயரப்படுவதைப் போலவே அவரும் ஒரு வகையில் துயரத்தில் சிக்கியுள்ளார் என்பது அவரைச் சந்தித்தபோது தெரிந்தது - என்றார்.

# ஈழத் தமிழருக்காக நாடாளுமன்றில் குரல் கொடுக்கவே போட்டியிடுகிறேன்

## தாயாரிடம் ஆசி பெற்று வைகோ பிரசாரம்



நெல்லை, ஏப். 17

இலங்கைத் தமிழருக்காகக் குரல் கொடுக்கவே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறேன் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தேர்தல் பிரசாரம் செய்தார்.

விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் ம.தி.மு.க. வேட்பாளராக வைகோ போட்டியிடுகிறார். நேற்றுமுன்தினம் காலை தாயார் மாரியம்மாளிடம் ஆசிபெற்று கலிங்கப்பட்டியில் இருந்து பிரசாரத்திற்கு கிளம்பினார். விருதுநகர் தொகுதி சிவலிங்காபுரத்தில் பிரசாரத்தை தொடங்கினார். அப்போது அவர் பேசியவை வருமாறு -

என்னைத் தேர்ந்தெடுத்தால் இலங்கைத் தமிழர் படுகொலையைத் தடுத்து, இலங்கைப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர நாடாளுமன்றத்தில் ஓங்கிக் குரல் கொடுப்பேன். இதற்காகவே இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

ஈழத் தமிழர் பிரச்சினைக்காக என்மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர். என்னைக் கைது செய்தால் மக்கள் எனக்காக வாக்குக் கேட்க வேண்டும்.

இலங்கைத் தமிழருக்காக என் மீது தொடரப்பட்ட வழக்கு குறித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் வெளியிட்டிருந்த அறிக்கையில், ''வைகோ ஆரம்பத்தில் இருந்தே ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுத்து வருகிறார். இப்போது அவர் பேசியதில் தவறில்லை'' என்று எனக்காக குரல் கொடுத்துள்ளார். இதுதான் நட்பு; தோழமை என்றார்.

# சுடிதாருடன் கோவிலுக்குள் நுழைந்த நயன்தாரா பக்தர்களால் சிறைவைப்பு

## மன்னிப்புக் கேட்டபின்னர் விடுவிப்பு

திருவனந்தபுரம், ஏப். 17

சேலை கட்டிய பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்ற அம்மன் கோவில் ஒன்றுக்குள், தடையை மீறி சுடிதாருடன் நுழைந்த நடிகை நயன்தாராவை பக்தர்கள் சிறைவைத்த சம்பவம் கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம் திருச்சூர் அருகில் கெல்லிக்காவு அம்மன் கோவில் என்ற பழைமையான கோவில் உள்ளது. இந்தக் கோவில் அருகில் நயன்தாரா நடிக்கும் 'பாடிகார்ட்' என்ற மலையாள படத்தின் படப்பிடிப்பு நடந்தது.

படப்பிடிப்பு இடைவேளையில் நயன்தாரா சுடிதாருடன் துணிச்சலாக அந்தக் கோவிலுக்குள் நுழைந்தார். அம்மனுக்கு முன்னால் நின்றபடி பக்தியுடன் சுவாமி கும்பிட்டார். அதற்குள், நயன்தாரா சுடிதார் அணிந்து கோவிலுக்குள் வந்திருக்கும் தகவல் பரவிவிட்டது.

கோவிலுக்குள்ளும், வெளியேயும் நின்ற



பக்தர்கள் ஆவேசமாக நயன்தாராவை சூழ்ந்தனர். சுடிதார் அணிந்து எப்படி கோவிலுக்குள் வரலாம் என்று நயன்தாராவிடம் பக்தர்கள் வாக்குவாதம் செய்தனர். அவர்களுடன் நயன்தாராவும் வாக்குவாதம் செய்தார்.

அதைத்தொடர்ந்து அவரை வெளியில் போகவிடாமல், கோவிலுக்குள்ளேயே சிறை வைத்தார்கள். சுமார் 45 நிமிடங்கள் பரபரப்பாக இருந்தது. வேறுவழியில்லாமல், நயன்தாரா தன்னை சூழ்ந்து நின்ற பக்தர்களிடம் மன்னிப்புக் கேட்டார். இனிமேல் சேலை கட்டாமல், கோவிலுக்குள் வரமாட்டேன் என்று அவர் உத்தரவாதம் அளித்ததன் பேரில், அவரைப் பக்தர்கள் விடுவித்தனர்.

# நமது சொந்தங்கள் செத்து மடியும்போது ஒருமித்துக் குரல் கொடுக்க யோசிப்பதா?

## ஈழத் தமிழருக்காக நடிகர் சத்யராஜ் ஆவேசம்

பக்கத்து வீடு பற்றி எரியும்போது பார்த்துக் கொண்டிருக்கலாமா? நம் சொந்தங்கள் செத்து மடியும் போது குரல் கொடுக்கக் கூட யோசித்துக்கொண்டிருக்கலாமா - என்று நடிகர் சத்யராஜ் ஆவேசமாகக் கேள்வியெழுப்பினார்.

கவிஞர் பா.விஜய் நாயகனாக நடிக்கும் ஞாபகங்கள் படத்தின் பாடல் வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்தது. அதில்



பேசும்போது அவர் இதனைக் கூறினார்.

நடிகர் சத்யராஜ், இவ்விழாவிற்கு வந்ததுமே அனைவரின் கவனமும் அவர் மீது தான் இருந்தது. அதற்குக் காரணம், அவர் அணிந்திருந்த கறுப்பு ரீ-சேட்டில் ஈழத்திற்காகக் குரல் கொடுப்போம் என்று ஆங்கில வாசகம் அச்சிடப்பட்டிருந்ததுதான்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

நான் இந்த மேடையை ஈழ விடயத்திற்காகத்தான் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். தேர்தலுக்காக யார் வேண்டுமானாலும் யாருடனாவது கூட்டணி வைத்துக் கொள்ளட்டும். ஆனால், ஈழத்தமிழர்கள் விடயத்தில் ஒன்றுபடட்டும். ஒருமித்த குரல் எழுப்ப வேண்டுகிறேன். வெளிநாடுகளில் எத்தனை தமிழர்கள் இருக்கிறார்களோ அத்தனை தமிழர்களும் ஈழ ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்.

ஆனால் தாய்த் தமிழகத்தில் எத்தனை தமிழர்கள் கலந்து கொள்கிறார்கள். இதுதான் வேதனை. ஈழத்தமிழர்களுக்காக அனைத்துத் தமிழர்களும் குரல் கொடுக்க முன்வரவில்லை.

பக்கத்து வீடு பற்றி எரியும் போது பார்த்துக் கொண்டிருக்கலாமா? நம் சொந்தங்கள் செத்து மடியும் போது குரல் கொடுக்கக் கூட யோசித்துக்கொண்டிருக்கலாமா? - என்றார்.

# இலங்கையிலிருந்து ஹெரோயின் கடத்தியவருக்கு 3 ஆண்டு சிறை

இலங்கையிலிருந்து சென்னைக்கு ஹெராயின் கடத்தியவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கையடக்கத் தொலைபேசிகளில் மறைத்து வைத்து 375 கிராம் ஹெரோயினை இலங்கையில் இருந்து கடத்தி வந்த பொன்னுசாமி லட்சுமணன் என்பவரை கடந்த 2006 பெப்ரவரி 2ஆம் திகதி, சென்னை சர்வதேச விமான நிலையத்தில் சுங்கத் துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரித்த போதைப்பொருள் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஏ.ஜெ.முருகானந்தம் ஹெரோயின் கடத்திய பொன்னுசாமிக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் ரூபா 3.3 ஆயிரம் அபராதமும் விதித்தார்.

# தமிழகம், புதுச்சேரித் தொகுதிகளில் இன்று வேட்புமனுத் தாக்கல் ஆரம்பம்

தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் வேட்பு மனுத்தாக்கல் இன்று தொடங்குகிறது. அனைத்துத் தொகுதிகளிலும் மனுத் தாக்கலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மக்களவைக்கு நேற்றிலிருந்து மே 13ஆம் திகதி வரை 5 கட்டங்களாகத் தேர்தல் நடத்தப்படுகிறது. 124 தொகுதிகளில் முதல்கட்ட வாக்குப்பதிவு நேற்று நடந்தது. தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் மே 13ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடக்கிறது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் இன்று தொடங்குகிறது. மனுத் தாக்கலுக்கு 24ஆம் திகதி கடைசி நாள். 25ஆம் திகதி வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்படும். மனுக்களை வாபஸ் பெற 27ஆம் திகதி கடைசி நாள். அதன்பிறகு இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

மனுத் தாக்கலின்போது தேர்தல் விதிகள் மீறப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மனுத் தாக்கலின்போது வேட்பாளருடன் 3 வாகனங்கள் மட்டுமே வரவேண்டும். தேர்தல் அதிகாரி அறைக்கு வேட்பாளருடன் நான்கு பேர் மட்டுமே செல்ல வேண்டும் என்பது உட்பட பல கட்டுப்பாடுகளை தேர்தல் கமிஷன் விதித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாவனையாளர்களின் சகல நுகர்வுத் தேவைகளையும் நிறைவேற்றும் விதத்தில் ''கோப் சிற்றிகள்'' இயங்கும்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சொல்கிறார்

அச்சுவேலி, ஏப்.17

கூட்டுறவுத்துறை நவீன உலகியல் மாற்றத்துக்கு ஏற்ப மறுசீரமைப்புச் செய்யப்படுவதுடன் பாவனையாளர்களுக்கான சகல தேவைகளை வழங்குவதற்கும் நுகர்வோர் விரும்பிய முறையில் தமக்கு தேவையான பொருள்களை தெரிவு செய்து கொள்வனவு செய்வதற்கும் வசதிகள் செய்யப்பட வேண்டும். அதனை பிரதான நோக்கமாகக் கொண்டே ''கோப் சிற்றி''கள் நிறுவப்படுகின்றன.

இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம்.

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று சிறப்பு கூட்டுறவு நகரங்களின் திறப்பு விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் க.பேரின்நாயகம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்துகொண்டார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்வோர் கிளைகளின் தொழிற்பாடு, வெறுமனே நிவாரணத்தை மட்டும் மையமாக வைத்து செயற்படுவதாக எட்டப்பட்டுள்ள பொதுக்கருத்து எதிர்காலத்தில் முற்றாக இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும்.

கூட்டுறவின் நோக்கம் சமூகத்துக்கு முழுமையாக சென்றடையச் செய்யவேண்டும். கூட்டுறவு தொடர்பாக சமூகத்தில் நிலவும் எண்ணக்கருத்து முற்றாக களையப்படவேண்டும். கூட்டுறவுகளால் அடைய முடியாதது என்று ஒன்றும் இல்லை. அந்த நிலையில் நாம் அதனை எதிர்காலத்தில் முழுமையாகப் பயன்படுத்தி நுகர்வோருக்கு சகல வகையிலும் உதவவேண்டும்.

கூட்டுறவு நவீன உலகத்தின் மாற்றத்துக்கு ஏற்ப தனது செயற்பாட்டையும் மாற்றி நவீன உத்திகளுக்கு ஊடாக கவர்ச்சிகரமான முறையில் சேவையாற்ற வேண்டும். அதற்கு ஏற்புடைய முறையில் தான் ''கோப் சிற்றி'' அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் முதற்கட்டமாக 25 ''கோப் சிற்றி''கள் செயற்படுகின்றன இரண்டாம் கட்டமாக 66 கோப் சிற்றிகள் செயற்படவுள்ளன. இந்த வகையில் எதிர்காலத்தில்கூட்டுறவுச் சங்கங்களின் சகல கிளை நிலையங்களும் ''கோப் சிற்றி'' வடிவமைப்புக்கு உள்வாங்கப்படலாம்.

யாழ். மாவட்டத்தில் இரண்டு வகையான கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. ஒன்று சுற்றறிக்கைகளின் படியும் மற்றும்எமது அறிவுறுத்தலுக்கேற்ப முந்திக்கொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுப்பவை.

இரண்டாவது வகையை சேர்ந்தவை நாங்கள் என்ன கூறினாலும் சுற்றறிக்கைகள் எதை அறிவுறுத்தினாலும் மாற்றத்துக்கு உள்ளாகாமல் ஏனோ தானோ என்ற வகையில் தொழிற்படுபவை.

அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் முதலாம் வகையில் உள்ளடங்கும் முன்னணி கூட்டுறவுச் சங்கமாகும். முதலாம்கட்ட ''கோப் சிற்றி'' திறக்கப்பட்ட போது இரண்டு கோப் சிற்றிகளை திறந்து வைத்தது. இரண்டாம் கட்ட கோப் சிற்றிகளை புதுவருப் பிறப்புக்கு முன்னர் திறந்து வைக்கவேண்டும் என்ற வகையில் மூன்று கோப் சிற்றிகளை இன்று திறந்து வைத்துள்ளது. இந்த வகையில் அச்சுவேலியின் முன்மாதிரியான செயற்பாடு ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

கூட்டுறவுத்திணைக்களம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டும். ஆனால் செயற்பாடுகளை முன்னெடுத்து வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களையும் பணிப்பாளர்களையும் சார்ந்ததாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோருக்கு தேவையான அனைத்தையும் ஒரே இடத்தில் ஒரே முறையில் நிறைவான வகை யில் வழங்க வேண்டும் நுகர்வோரின் தேவையறிந்து தொழிற்பட வேண்டும் எனக் கூறினார்.

(அ-111)

## நோர்வே தூதரகம் முன்பாக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஏப். 17

நோர்வேயிலுள்ள இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டமையைக் கண்டித்து கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்திற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

கொழும்பு, வோர்ட்பிளேஸிலுள்ள நோர்வேத் தூதரகத்திற்கு முன்பாகவே பத்தரமுல்ல சீலாரத்ன தேரர் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நோர்வேயிலுள்ள இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டமையைக் கண்டிக்கின்றோம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்தாக்குதல் குறித்து உடன் விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும், இலங்கையிலுள்ள நோர்வேத் தூதரகம் மூடப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தாங்கியிருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நோர்வே, ஒஸ்லோவிலுள்ள இலங்கைத் தூதரகம் இனந்தெரியாத நபர்களால் தாக்குதலுக்குள்ளானது. தாக்குதலில் யன்னல் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டன என்பது அறிந்ததே. (சி)

# பொலிஸ் அதிகாரி ஜமால்தீனின் கொலை குறித்து தகவல் தருவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம்

## பொலிஸ் திணைக்களம் அறிவிப்பு

கல்முனை, மருதமுனைப் பகுதியில் வைத்து கடந்த ஐந்தாம் திகதி இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு, கல்லடி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் இயக்குநர் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம். ஜமால்தீனின், படுகொலைச் சூத்திரதாரிகள் தொடர்பான தகவல்களைத் தருவோருக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் வழங்க பொலிஸ் திணைக்களம் முன் வந்திருக்கின்றது.

தகவல்கள் தருவோரின் இரகசியம் பேணப்படும் எனப் பொலிஸ் தரப்புத் தெரிவித்துள்ளது.

தகவல்களை கொழும்பு குற்றவியல் பிரிவின் இயக்குநருக்கோ (தொலைபேசி இலக்கம் 011 - 2662323) அல்லது அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கோ (தொலைபேசி இலக்கங்கள் 063 - 2222227 மற்றும் 063- 2222217) தெரியப்படுத் தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வணிகபீட விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட முதலாம் அரையாண்டுக்கான இடைப் பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் என பீடாதிபதி க.தேவராஜா அறிவித்துள்ளார்.

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட விரிவுரைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (1)

## காரைநகரில் நாளை நடேசர் அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.17

காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்தில் நாளை சனிக்கிழமை நடேசர் அபிஷேகம் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணி முதல் விசேட அபிஷேகமும் தொடர்ந்து பூசை வழிபாடுகளும் இடம்பெறும்.

வருடத்தில் ஆறு தடவைகள் நடைபெறும் நடேசர் அபிஷேகத்தின் சித்திரை மாத அபிஷேகம் இதுவாகும்.

(1-250)

# மேல்மாகாண சபைத் தேர்தல் முடிந்த கையோடு பொருள்களின் விலைகள் மீண்டும் எகிறும்

## ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.ஆருடம்

கொழும்பு, ஏப். 17

மேல்மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையோடு பொருள்களின் விலைகளை மீண்டும் அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பி. கபீர் ஹாசீமே இதைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அரசின் பொருளாதார இலக்குகள் எவையும் வெற்றிபெறவில்லை. அரசு எதிர்பார்த்த இலாபம் கிடைக்கவில்லை.

2008 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரசு எதிர்பார்த்த இலாபம் முழுமையாகக் கிடைக்கவில்லை. இதனால் பணத்தை அச்சடிக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது. இந்தப் பண அச்சடிப்புக் காரணமாகப் பணவீக்கம் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது.

அரசு தனது பொருளாதாரத் திட்டங்களின் ஊடாக இலாபத்தைப் பெற முடியாதுள்ளதால் வரிகளை அதிகரித்து அவற்றின் ஊடாக மக்களிடமிருந்து பணத்தைப் பிடுங்குகின்றது.

இந்த வரிச்சுமை காரணமாக மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். வாழ முடியாமல் கஷ்டப்படுகின்றனர். மக்களின் வருமானம் குறைந்துள்ளது.

இந்நிலையில் மேல் மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையோடு மீண்டும் பொருள்களின் விலைகளை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

அரசு இப்போது எதையுமே நிர்வகிக்கக்கூடிய நிலையில் இல்லை. திறமையற்ற நிர்வாகமே நடக்கிறது. யுத்தத்தை மாத்திரம்தான் அரசு நம்பியிருக்கின்றது.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரத் திட்டம்தான் சரியானது என்று நாட்டு மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். எமது ஆட்சியில் இருந்த பொருளாதாரத்திற்கும் இப்போதைய பொருளாதாரத்திற்குமிடையில் அதிக வித்தியாசங்கள் காணப்படுகின்றன - என்றார்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.17

புத்தூர் மேற்கு கலைமதி முன்பள்ளி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணியளவில் புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

கலைமதி முன்பள்ளி பாடசாலையின் தலைவர் கா.கதிர்காமன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## வவுனியா அகதி முகாம்களில் உள்ள ஜீ.சி.ஈ. மாணவருக்கு விசேட வகுப்புகள்

கொழும்பு, ஏப் .17

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள ஜி.சீ.ஈ., உயர்தர வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள கணித மற்றும் விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள், அவர்களுக்கான ஆசிரியர்கள் ஆகியோரின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு இறுதி அறிக்கைகள் நேற்று எடுக்கப்பட்டன என வவுனியா மாவட்ட அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்மூலம் இந்த ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைக்கப்பட்டு வவுனியாவில் உள்ள கதிர்காம நிவாரணக் கிராமத்தில் அவர்களுக்குரிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# இலங்கை நிலைவரம் குறித்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் விவாதிக்க கோரிக்கை

## 10 எம்.பிக்கள் கையெழுத்திட்டு சபை முதல்வருக்கு கடிதம்

கொழும்பு, ஏப். 17

இலங்கையில் அதிகரித்து வரும் மோதல்கள் தொடர்பாக பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் மீண்டும் ஆராய வேண்டுமென அந்நாட்டு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வெஸ்ற்மின்ஸ்ரரில் கடந்தவாரம் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்து வீரேந்திரசர்மா எம்.பியும் மேலும் பலரும் சபை முதல்வருக்கு இது தொடர்பாக கடிதம் அனுப்பியுள்ளனர்.

இலங்கை நெருக்கடி தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்க அனுமதிக்குமாறு சபாநாயகரைச் சந்தித்துக் கோரிக்கை விடுக்குமாறு இந்த எம்.பி.க்கள் குழு சபை முதல்வரை கேட்டிருக்கின்றது என 'சிக்ஸ் ரைம்ஸ்' பத்திரிகை கடந்த புதன்கிழமை தெரிவித்தது.

தமிழர்களுக்கான சர்வகட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவராக வீரேந்திர சர்மா இருக்கிறார். அவர் சபை முதல்வரான ஹரியட் ஹர்மானுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் 'இலங்கையில் இடம்பெற்றுவரும் மோதல்கள் தொடர்பாக தாம் கையெழுத்திட்டு இக்கடிதத்தை தங்களுக்கு எழுதுகிறோம். பயங்கரமான சூழ்நிலை அங்கு நிலவுவதை அண்மையில் 'வெஸ்ட் மினிஸ்ரரில்' இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் எமக்கு ஞாபகமூட்டுபவையாக உள்ளன. மோதலின் விளைவாக அதிகளவு இழப்புகள் ஏற்பட்டுள்ளது. டிசெம்பரின் பின் மூவாயிரம் மக்கள் இறந்துள்ளனர். நிலைமையின் அவசரத்தை முன்னிட்டு அரசின் சார்பாக தாங்கல் சபாநாயகரைச் சந்திக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கி றோம்.

இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றம் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து செயற்படுமென நம்புகிறோம் என்று வீரேந்திரசர்மா குறிப்பிட்டுள்ளார்.

கித்வாஸ், கெரமி கோர்பைன், டோன் பட்லர், ஸ்ரிபன் பவுண்ட், சியோபாபைன் மக்டொனாக், சிமென் ஹக்ஸ், நீர்ஜொட், டயானி அபோர்ட், அன்ட்ரூ பெலவில் ஆகியோரும் இக்கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# களுத்துறை சிறைச்சாலைச் சம்பவம்; விசாரணைக்கு விசேட குழு நியமனம்

கொழும்பு, ஏப். 17

களுத்துறைச் சிறையில் இருந்து தப்பி ஓட முற்பட்ட வேளையில் 6 கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு சிறைச்சாலைகள் உதவி ஆணையாளர் ஒருவரின் தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தன தெரிவித்திருக்கின்றார்.

சம்பவதினம் குறித்த சிறைச்சாலையில் கடமையிலிருந்த சிறைக்காவலர்களால் முறையான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன என்றும் சிறைச்சாலை ஆணையாளர் சொன்னார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து களுத்துறைச் சிறைச்சாலைக்கு 45 புதிய அலுவலர்கள் உடடியாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை - கைதிகள் தப்பிச் செல்ல முயன்றார்கள் என்று கூறப்படும் சமயத்தில் கடமைக்குச் சமுகமளிக்கத் தவறியிருந்த சிறைச்சாலை அலுவலர்கள் மீது தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சு அறிவித்திருக்கின்றது.

(சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# முள்ளிவாய்க்கால் பகுதி மீது நேற்று ஷெல் தாக்குதல்; 36 பேர் மரணம்; 43 பேர் படுகாயமுற்றனர்

கொழும்பு, ஏப். 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் பகுதி மீது படையினர் நேற்று மேற்கொண்டஷெல் தாக்குதலில் 36 பேர் கொல்லப்பட்டதுடன் 43 பேர் காயமடைந்தனர் என இணையத்தளங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக இணையத் தளங்கள் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் பாதுகாப்பு வலயத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை 8.50 மணியளவில் ஆட்லெறி ஷெல் மற்றம் பல்குழல் வெடிகணைத் தாக்குதல்கள் மக்கள் வாழ்விடங்கள் மீது நடத்தப்பட்டுள்ளன.

இத் தாக்குதலில் 36 பேர் கொலையுண்டனர்; 43 பேர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதல்களினால் மக்களின் 7 கூடாரங்கள் முற்றாக அழிந்து நாசமாகின.

காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு பொதுமருத்துவமனையினதும் நட்டாங்கண்டல் மருத்துவமனையினதும் சிகிச்சை நிலையங்களில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் காயமடைந்தவர்களுக்கு 'திலீபன்' மருத்துவ சேவைப்பிரிவினரும் சிகிச்சைகளை வழங்கி வருகின்றனர்.

மாத்தளன் மருத்துவமனைக்குச் செல்லும் வீதி படையினரின் கடுமையான ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகியிருப்பதனால் காயமடைந்தவர்களை கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-1)



தமிழ் தேசிய கூட்டமைப்பு குழுவினருக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனனுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் பின்னர்.......

## இந்தியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 124 மக்களவைத் தொகுதியில் ஆயிரத்து 715 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர். 14 கோடி 31 வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

எனினும், நேற்றுக்காலை 7 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை 20 முதல் 30 சதவீத வாக்குகளே பதிவாகியுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு லட்சத்து 85 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவு நடைபெற்றது.

ஜார்கண்ட் மாநிலத்தில் லதேகார் மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடச் சென்ற எல்லைப் பாதுகாப்பு படையினரின் வாகனத்தின் மீது நக்சலைட்டுக்கள் கண்ணி வெடித் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் 5 படையினர் உட்பட 7 பேர் கொல்லப் பட்டனர். பீகார் மாநிலத்தில் தேர்தல் பணியில் இருந்த ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவரை நக்சலைட்டுக்கள் சுட்டுக் கொன்றனர்.அதில் மேலும் ஒருவர் காயமடைந்தார். கடமையில் இருந்த இரு பொலிஸாரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

ஒரிசா மாநிலத்தில் மூன்று வாக்குச் சாவடிகளில் இருந்த மின் அணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப் பதிவுக்குத் தேவையான சாதனங்களை மாவோயிஸ் தீவிரவாதிகள் தீவைத்துக் கொளுத்தினர். (அ-சி)

## நெதர்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'அனைத்துலக ஊடகத்துறையினரை வன்னிப் பகுதிக்கு அனுப்பி உண்மை நிலையினை அறிதல் வேண்டும்',

'அனைத்துலக தொண்டு நிறுவனங்களை வன்னிப் பகுதிக்கு அனுப்பி மனிதாபிமான உதவிகளை வழங்குதல் வேண்டும்',

'விடுதலைப் புலிகளுடன் நிரந்தர அரசியல் தீர்வுக்காகப் பேச்சு நடத்தப்பட வேண்டும்.'

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நெதர்லாந்து அரசையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் வலியுறுத்தி இப்பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படைத் தளபதி வசந்த கரணகொட, விமானப்படைத்தளபதி றொஷான் குணதிலக, பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

வன்னியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை குறித்து களமுனைத் தளபதிகள் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறினர்.

படையினருடன் சிற்றுண்டிகளை பரிமாறிக்கொண்ட ஜனாதிபதி அவர்களுக்கு புதுவருட பரிசில்களையும் வழங்கினார்.

அங்கு சேதமடைந்த பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், அரச கட்டடங்களையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பணிமனை மற்றும் சமாதானச் செயலகத்தையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

கிளிநொச்சி விஜயத்தை முடித்துக் கொண்டு வன்னியில் படை அதிகாரிகளையும் ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடினார் - என்றுள்ளது. (அ-

## மீண்டும் யுத்த நிறுத்தத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகாரச் செயலாளர், டேவிட் மில்லிபாண்ட் மற்றும் பிரான்ஸ் வெளிவிவகாரச் செயலாளர் ஆகியோர் கூட்டாக இதனை வலியுறுத் தியிருக்கின்றனர்.

ஐ.நாவின் மனித உரிமை விவகாரங்களுக்கான ஆணையாளர் ஜோன் ஹோம்ஸும் புதிய யுத்தநிறுத்தம் ஒன்றின் தேவையை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

''அங்குள்ள மக்களுக்குப் போதுமான அளவு உதவிகள் கிடைக்கச் செய்வதற்கும் எமது மனிதாபிமானப் பணியாளர்கள் அங்கு செல்வதற்கும் 48 மணிநேர யுத்த இடை நிறுத்தம் போதாது என்பது சாதாரணமாக அனைவருக்கும் தெரிந்த விடயம்'' என்று ஜோன் ஹோம்ஸ் தெரிவித்தார்.

இதேவேளை - விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர் என்று குற்றஞ்சாட்டியிருக்கும் பிரிட்டனும் பிரான்ஸும் அதற்குத் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றன.

''மோதல் நடைபெறக்கூடிய பகுதிகளில் மக்களை வலுக்கட்டாயமாகத் தடுத்து வைத்திருக்கின்றமை மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்'' - என இரு நாடுகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கின்றன. (அ-சி)

## ஐ.நா.செயலரின் பிரதிநிதியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுடன் பேசுவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள இயலும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருப்பதாகவும் ஐ.நா.வட்டார்ங்களிலிருந்து அறியப்படுகிறது.

இலங்கை விவகாரத்தில் அமைதியான ராஜதந்திரமே (Quiet Diplomacy) உகந்ததென ஐ.நா. வட்டாரங்களில் கருதப்படுவதாக அறியவருகிறது.

அதன் பிரகாரம், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் தூதராக பிரிட்டனைச் சேர்ந்த டெஸ் பிறவுணை அனுப்ப ஆயத்தங்கள் நடைபெற்றன.

எனினும் இலங்கை அரசாங்கம் அதனை விரும்பாததனால், இப்போது மூத்த ராஜதந்திரியான விஜய் நம்பியாரை அனுப்புவதற்கு முடிவாகியது.

இந்தியாவில் தமிழ் நாட்டில் கோடிக்கணக்கான தமிழர்கள் வாழ்வதாலும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதால், அங்குள்ள மக்களின் மனநிலை கருதியும் இந்தியர் ஒருவரை இலங்கைக்கு ஐ.நா. தூதுவராக அனுப்புவது பொருத்தமானதா என்ற கருத்து நிலையும் ஐ.நா. வட்டாரங்களில் ஏழுப்பப்படுகின்றது.

இது ஒரு புறம் இருக்க இலங்கை அரசாங்கம் முல்லைத்தீவில் தனது இறுதி இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் பட்சத்தில் ஐ.நா. சபை முல்லைத்தீவை அண்டிய கடற்பகுதி[illegible]ரில் கப்பல்களை தரித்து நிற்கச் செய்[illegible] பாதிப்புறும் மக் களை ஏற்றிச் செல்ல வழி செய்யலாம் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

எனினும் சீனாவுடன் நம்பியாருக்குள்ள தொடர்பும் அவர் முன்னர் நெருக்கடியான காலகட்டத்தில் சீனாவில் இந்தியாவின் தூதுவராக பணி புரிந்தமையும் அவருக்கு சீன மொழியில் உள்ள பாண்டித்துவமும் இலங்கை விவகாரத்தை பாதுகாப்பு சபையில் ஆராய்வதற்கு சீனா தெரிவித்து வரும் எதிர்ப்பை நம்பியாரின் நியமனத்தின் மூலம் ஓரளவுக்கு சார்பு நிலைக்கு கொண்டுவர முடியும் என்ற எதிர்பார்ப்பும் ஐ.நா. வட்டாரங்களில் நிலவுகிறது. (அ)

## குறுகிய நிலப்பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் புதுடில்லி வந்துள்ள கூட்டமைப்பின் தூதுக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்த இரண்டு நாள் போர் நிறுத்தத்தால் எந்தப் பலனும் ஏற்படவில்லை என்று இந்திய வெளி விவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் எடுத்துக்கூறினர்.

தற்போதைய நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் குறுகிய பகுதியில் இரண்டரை லட்சம் மக்கள் உள்ளனர். அவர்களுடைய உயிர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அவர்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டுமானால் உடனடியாக போர் நிறுத்தம் செய்வது அவசியம் என்பதை கூட்டமைப்பு எம்.பிக்கள் சிவ்சங்கர் மேனனின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

வன்னி நிலைமைகள், மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் தொடர்பாக விளக்கிக்கூறிய சம்பந்தன், உடனடியாகப் போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இதற்கான அழுத்தங்களை இந்திய அரசாங்கம் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத் தியுள்ளார்.

இரண்டு நாள் களுக்குப் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட போதிலும் அதனால் எந்தவிதமான பலனும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்த சம்பந்தன், இந்தக் காலப்பகுதியில் மட்டும் 200 அப்பாவிப் பொதுமக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் கொல்லப்பட்டிருப்பதையும் சுட் டிக்காட்டினார்.

பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட சம்பந்தன் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டரை லட்சம் மக்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் மிகக்குறுகிய பகுதியான பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அடைக்கலம் புகுந்திருக்கின்றனர்.

தற்போதைய நிலைமையில் அவர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. உடனடியாகப் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டால் மட்டும்தான் இந்தப் பகுதியில் உள்ள தமிழர்களைப் பாதுகாக்க முடியும்.

இதனால் சிறிலங்கா படைகள் மேற்கொண்டுவரும் தாக்குதலை உடனடியாக நிறுத்துவதற்கான அழுத்தத்தைக் கொடுக்குமாறு இந்திய வெளிவிவகாரத் துறை செயலரிடம் வலியுறுத்தினோம் - எனத் தெரிவித்துள்ளார். (அ)

IBS கல்வி நிறுவனம்,
சுண்டுக்குளி.
O/L DAY
CLASS
''உங்கள் எதிர்காலத்தை வளமாக்க எங்களுடன் இணையுங்கள்''
ஆரம்பம்:- 20.04.2009
திங்கள் 12 மணி

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2009 & DAY
CHEMISTRY
* PAPER Mon. Sat 6.15 a.m
* PHYSICAL Wed 3.30 p.m, Fri 5 p.m
M.A.நிரோஜன்
A/L 2011 கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
CIMA
Certificate in Business Accounting
6 மாதங்களைக் கொண்ட கற்கைநெறி
ஆரம்பம்:- 18.04.2009 1.00pm (Saturday)
Chartered Accountancy
Foundation level & intermediate level
ஆரம்பம்:-19.04.2009 11.00 am (Sunday)
Furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, hospital Road,
Jaffna.

யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர் குழுவுடன்
A/L 2011
கலை, வர்த்தகம் பிரிவு
ஆரம்பம்:- 18.04.2009 [sat8.00am]
* ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்
NEC
Clock Tower Road, Jaffna
நாளை ஆரம்பம்
A/L 2011
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
கலை 8 மணி
வர்த்தகம் 11 மணி
DMI
யாழ்ப்பாணம்.
ஸ்ரான்லி வீதி, நாவலர் வீதி.

Jaffna College
Certificate Course in English
Batch I :- Week dayBatch 8.30 - 12.30
Batch II :- Week end Batch 8 - 12
Batch III :- Week end Batch 12.30-3.30
Course commencing on
18.04.2009 8.30 a.m. Week day batch
18.04.2009 8.00 a.m Week end batch
Examination time Table (sep 2008 Batch)
18/04 Sat 8.30 Reading Skills
10.30 Literature
19/04 Sun 8.30 Grammar
11.00 Listening
* ஆற்றலுக்கேற்ப குழுக்கள் தெரிவு செய்யப்படும்.
* வகுப்புகள் வார மற்றும் வார இறுதி நாள்களில் நடைபெறும்.
* நடந்து முடிந்த கற்கை நெறிக்கான பரீட்சைகள் 18.04.2009, 19.04.2009 நடைபெறும்.
Jaffna College Undergrduate Dept.
464, Hospital Road,
Jaffna.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org